461

கதர் மலர்

மலர் 5	அகில பாரத சர்க்கா சங்கம் வெளியிடும் மாதப் பத்திரிகை கர-வருஷ மாசி-மீ * பிப்ரவரி 1952	இதழ் 5

போட்டோ:— கனுகாந்தி — காந்தி சித்திராலயம், ராஜ்கோட்

வருட சந்தா ரூ. 3	ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,) வீரபாண்டி, திருப்பூர்	விலை அணா 4

கதர் மலர்

பிப்ரவரி 1952 தொடர் நே. 53

★ பொருளடக்கம் ★

எந்திரநாகரீகமும் இந்தியாவும்:
— காந்திஜி

பூமிதான யக்ஞம் — விநோபாஜியின் பிரசங்கம்:
— ஜகந்நாதன்

'அடியேனை சேவகியாக ஏற்றுக்கொள்:' மீரா
— ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு

காந்திக் காட்சிகள்:
— காகா கலேல்கர்

காந்தியும் மார்க்ஸீஸமும்:
— விநோபா பாவே

மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு:
— சுசீலா நையார்

வர்தா: — சத்தியன்

காந்திஜியின் முதல் தரிசனம்:
— அகர்வால்

ஜப்பானின் அதிசயமான முன்னேற்றம்:
— சஹஸ்ர புத்தே

வாலிபர்களுக்கு அழைப்பு:
— மஜூம்தார்

அன்னை கஸ்தூரிபாவின் கதர் பக்தி:
— ஸ்ரீமதி வனமாலா பரிக்

கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்கு என்ன காரணம்?
— விநோபாஜி

குறிப்பும் செய்தியும்

ஜீவித யந்திரங்களை உபயோகித்தல்

மகாத்மா காந்தி

யந்திர முறை சுலபமானதே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதனாலேயே அது நன்மை பயப்பதாய் ஆகிவிடாது. மேட்டிலிருந்து பள்ளத்தில் வழுக்கி விழுதல் சுலபம்; ஆனால் அது ஆபத்தானது. கையினால் செய்யும் முறையினால் நன்மையே விளையும். குறைந்த பக்ஷம் இந்த விஷயத்திலாவது அது உண்மையேயாகும். ஏனெனில் அதைச் செய்வது சுலபம். யந்திர முறையில் உள்ள மோகம் இருந்து கொண்டே வருமானால், அநேகமாகப் பின்னொரு காலத்தில் நாம் நம் திறமையையும் சக்தியையும் முற்றிலும் இழந்தவர்களாகிவிட, ஆண்டவனால் நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஜீவனுள்ள யந்திரங்களை உபயோகியாததற்காக நாம் நம்மையே நொந்து கொள்ள நேருதல் பெரிதும் சாத்தியமே. கோடிக் கணக்கான மக்கள் பந்தய விளையாட்டுக்களினாலும் தேகாப்பியாசம் செய்வதனாலும் தம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. மேலும், அவர்கள் தம் கையிலுள்ள உபயோகமானதும் பொருள் உற்பத்திக்கு, உதவுவதும் உடலின் சக்தியைச் சோதித்துப் பார்ப்பதுமான தொழில்களை விட்டு, பயனற்றதும் பொருள் உற்பத்திக்கு உதவுவதும் செலவு வைப்பதுமான விளையாட்டுக்களையும் தேகாப்பியாசங்களையும் எதற்காகத் தேடிப் போகவேண்டும்? தற்சமயத்தில் ஒரு மாறுதல் பொழுது போக்கு என்ற வகையில் அவைகளினால் அதிகத் தீங்கு நேரவில்லை. ஆனால் எந்த உணவின் உற்பத்தியில் நாம் கலந்து கொண்டதே இல்லையோ அதைத் தின்பதற்கு வேண்டிய பசியை உண்டாக்கிக் கொள்வதற்கு இவை இன்றியமையாதவை யாகிவிடும் பொழுது இவை நமக்கு அருவருப்பையே தரும்.

கதர் மலர்

மலர் 5 | கர-ஹு மாசி-மீ * பிப்ரவரி 1952 | இதழ் 5

★ மேல்நாட்டு யந்திர நாகரீகமும் இந்தியாவும் ★

‘கடவுளையும் சைத்தானையும் ஒரே காலத்தில் வழிபட இயலாது’

மகாத்மா காந்தி

கேள்வி

(1) இந்தியா மேல் நாடுகளைப்போல் இயந்திரக் கைத்தொழிலில் ஈடுபட்டாக வேண்டும்.

(2) ஜீவனோபாயப் பிரசினையை ராட்டையினால் தீர்க்க முடியாது.

(3) ராட்டை வெற்றி பெறுவதற்குள்ள நிபந்தனைகள் இப்பொழுதைய உலகப் போக்கினிடமும் மனித சுபாவத்தினிடமும் அசாத்தியமானவற்றை எதிர்பார்க்கின்றன.

(4) உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதைவிட வெளிநாட்டு வியாபாரத்தைக் கைப்பற்றுவதிலேயே யந்திரங்களின் சிறப்பு அடங்கியிருப்பதோடு அதுவே அது வந்தால் நலமென்று கருதுவதற்குக் காரணமும் ஆகிறது.

(5) இந்தியா நிலைத்திருந்து தன் பாரமார்த்திகப் பணியைச் செய்துவர வேண்டுமானால் அது நவீன முறைகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும். நாம் தயக்கமின்றி சுறுசுறுப்பாக முயன்று நவீனக் கைத்தொழில் முறைகளைத் தமதாக்கிக் கொள்வோமாக. ஆனால் அதே சமயத்தில் மிகுந்த தீவிர புத்தியுடன் பாரமார்த்திகத்தைப் பயின்று நாட்டு மக்களின் மனத்தில் மிகவும் சீரிய முறையில் ஆன்மீக வாழ்வில் பற்றையும் தேசாபிமானத்தையும் உண்டாக்குவோமானால், அவைகளின் உதவியினால் மேல்நாடுகள் வழி தெரியாது தேடித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நவீன வாழ்க்கையென்ற இருண்ட பாதையை நாம் சுலபமாய்க் கடந்துவிடலாம். ஆன்மீக வாழ்வை நம் லக்ஷ்யமாய்க் கொள்ளாதிருக்கும் வரையில் நவீன வாழ்க்கை நம்மை அதபாதாளத்தில் ஆழ்த்தியே தீரும்.

பதில்

யந்திர நாகரீகமும் யுத்தமும்

இந்த அபிப்ராயங்களை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை என்பதற்காக நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டுவிடுகிறேன். இவை நவீன நாகரிகம் மற்றவையுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் நல்லதே, அதை நம்மால் வெற்றிகரமாக எதிர்த்து நிற்க முடியாது என்ற முடிவுகளை ஆதாரமாய்க் கொண்டிருக்கின்றன என்பது தெளிவு. ஒரு பக்கத்தில் திருப்தியே செய்ய முடியாத பண ஆசையையும் மறு பக்கத்தில் அதன் விளைவான யுத்தத்தையும் கொண்டுள்ள இந்த நாகரிகம் இருக்கிறதே அதனிடம் மேல்நாட்டிலேயே அறிவாளிகளிடையே அவநம்பிக்கை தோன்றி வளர்ந்து வருகிறது. அது நல்லதாயினும் சரி, கெட்டதாயினும் சரியே, மேல் நாடுகளைப் போல் இந்தியாவும் ஏன் யந்திரக் கைத்தொழில்களில் ஈடுபட வேண்டுமோ தெரியவில்லை. மேல்நாட்டு நாகரிகம் நகர வாழ்க்கையின் அடிப்படையில் அமைந்தது. இங்கிலாந்தையும் இத்தாலியையும் போன்ற சிறு நாடுகள் தம்மை நகர வாழ்க்கைக்கு உகந்த முறையில் அமைத்துக் கொண்டால் பாதகமில்லை. குறைந்த ஜனத்தொகையுள்ள அமெரிக்காவைப் போன்ற

விஸ்தாரமான நாடுகளுக்கு ஒருக்கால் வேறு வழியே இல்லாதிருக்கலாம். ஆனல் பெருத்த ஜனத்தொகையும் இதுவரையில் அதற்கு மிக வும் உபயோகமாயிருந்துவந்த புராதன கிராம வாழ்வின் சம்பிரதாயங்களும்கொண்ட ஒரு பிரம்மாண்டமான நாடு மேல்நாட்டு வாழ்க்கைமுறையைப் பின்பற்றவேண்டாம், பின்பற்றக்கூடாது என்றுதான் எவரும் நினைக்கக்கூடும். விசேஷ நிலைமையிலுள்ள ஒரு நாட்டிற்கு நன்மையளிக்கக்கூடியது வேறு நிலையிலுள்ள பிரிதொரு நாட்டிற்கும் பொருத்தமாயிருக்கவேண்டுவதில்லை.

இந்தியா உயிர்வாழ ராட்டையின் அவசியம்

இரண்டாவது விஷயமான, ராட்டையி ஞல் ஜீவனேபாயத்திற்கு ஏற்பாடு செய்ய முடியாது என்பதிருக்கிறதே அது நிலைக்கக் கூடியதல்ல. இதற்கு மாருக ஜீவனேபாயத் திற்கு ராட்டையினலோ அதையேபோன்ற வேறென்றினலோதான் ஏற்பாடு செய்ய முடியும். இந்தியா உயிர் வாழ்ந்து வரவேண் டுமானல் குடிசைத் தொழில்கள் வேண் டியது அவசியமே என்பதை இந் நாட்டை யும் ஐரோப்பாவையும் சேர்ந்த பிரபல ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டி ருக்கிறர்.

நமது சுபாவத்திற்கு ஏற்ற ராட்டை

மூன்றும் வாதத்திற்கோ இப்பொழுது சுலபமாக பதில் சொல்லிவிடலாம். ராட் டையுடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் இப்பொழுதைய மக்களின் போக்கு, மனித சுபாவம் ஆகியவற்றிலிருந்து அசாத்தியமான தெதையும் எதிர்பார்ப்பதற்கு மாருக இந்தி யாவின் தற்காலப் போக்கிற்கும் இந்தியர் களின் சுபாவத்திற்கும் ஒத்த முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

27785

வெளிநாட்டு வியாபாரம்

நாலாவது வாதத்தில் யந்திரயுக வழிபாடு, அது உள் நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடும் என்பதற்காகவன்றி அதைக் கொண்டு வெளி நாட்டு வியாபாரத்தைக் கைப்பற்றலாம் என்பதற்காகவே ஆதரிக்கப் பட்டிருக்கிறது. நல்லகாலமோ அல்லவோ, இந்தியாவைப் பற்றிய வரையில் அது படை யெடுத்துக் கைப்பற்றக் கூடிய வெளி நாட்டு வியாபாரம் எதுவும் தற்சமயம் இல்லை. சுரண்டலில் வித்தையில் வல்லவர்களான மேல் நாட்டவர் இவ் வகையில் செய்யக் கூடியதை யெல்லாம் இதற்கு முன் செய்து தீர்த்து விட்டனர். நாமும் வேண்டுமானல் வெளி நாட்டு வியாபாரத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றலாம். அதே சமயத்தில் கைத் தொழிலில் முன்னேறியுள்ள மேல் நாடுகளைப் படையெடுத்து ஆக்கிரமித்தும் கொள்ளலாம். இம் மாதிரியான ஜோரான திட்டம் ஏதேனும் ஆலோசனையில் இருந்து வருமானல் ராட்டை யின் பக்தர்கள் தாம் செய்வதற்கு ஏற்றுள்ள வேலையைச் சாதிப்பதைவிட இதைச் சாதிப்பது எவ்வளவோ அதிக சிரமமானது என்பது அடியேனுடைய அபிப்பிராயம்.

கடவுளும் சைத்தானும்

கடைசி யோசனை ஆசிரியருடைய முழு குட்டையும் வெளியாக்கி விடுகிறது. அவர் இந்தியாவை நவீனக் கைத்தொழில் முறை யில் மாற்றி அமைக்க விரும்புகிறர். ஆனல் அதன் ஆன்மீக வாழ்க்கை முறையை அப் படியே வைத்துக்கொள்ளப் பார்க்கிறர். ஏனெனில், அது இல்லாதபொழுது நவீன வாழ்க்கை முறையினல் நாசமே விளையு மென்று அஞ்சுகிறர். எதை அனுபவம் வாய்ந்த ரிஷிகள் சாதிக்க முடியாதென்று நமக்குச் சொல்லி யிருக்கிறர்களோ அதையே இந்தியாவைக்கொண்டு செய்விக்கப் பார்க்கிறர். உங்களால் கடவு ளையும் சைத்தானையும் ஏக காலத்தில் வழிபட முடியாது. மேல் நாடுகள் இவ்விரண்டை யும் பொருத்தும் முயற்சியில் தோல்வியுற்று விட்டன என்பதை அவர் ஒத்துக்கொண்ட தாகக் காண்கிறது. அப்படியானல் அசாத்தி யமான இதை இந்தியாவினல் மட்டும் சாதித் துவிட முடியுமென்று அவர் நினைப்பது ஏனே? முன்னேர்கள் முடிந்திருந்தால் இதை எவ்வளவோ காலத்திற்குமுன் செய்திருப் பார்களென்பதை நாம் ஏன் உணர்ந்துகொள் ளக்கூடாது? இதற்கு வேண்டிய முயற்சியை செய்து பார்த்தபின்னர் அவர்கள் "இவை யெல்லாம் ஆண்டவனுடையது. ஆகவே உன் அயலானுடைய பொருளில் குறி வையாது வாழ்வாய்" என்று சொல்லியிருக்கிறர்கள். வாஸ்தவத்தில் சுரண்டலென்பதற்கு ஆக்கிர மிப்பு என்பதே பொருள். ஆக்கிரமிப்பை ஆன்மீக நோக்கத்துடன் ஒருபொழுதும் பொருத்தமுடியாது. ★ ★ ★

25-7-1929 - 'ராட்டை தத்துவ விளக்கம்' புத்த கத்திலிருந்து.

JL MTK m2 N481C N52.5.5

★ பூதான யக்ஞம் ★

உத்தரப் பிரதேசத்தில் வினோபாஜியின் யாத்திரைக் குறிப்பும் பேச்சும்

ச. ஜகந்நாதன்

தமிழ்நாட்டு நிர்மாண ஊழியர் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ ச. ஜகந்நாதன் மதுரை ஜில்லா நிர்மாண ஊழியர் சங்கத்தை காந்தி கிராமத்தில் உருவாக்கியவர்களில் முக்கியஸ்தர். காந்தி கிராமத்தில் பல கிராம ஊழியர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். சமீப காலத்தில் நிலப் பிரசினையைத் தீர்க்க தீவிரமாகப் பாடுபட்டு வருகிறார். இப்பொழுது வினோபாஜியுடன் பூதான யக்ஞ யாத்திரையில் கலந்து கொண்டிருக்கிறார். யாத்திரையில் நடக்கும் அதிசய சம்பவங்களையும், வினோபாஜியின் அருமைப் பொன்மொழிகளையும் "கதர் மலரு"க்காக எழுதி வருகிறார். அவற்றை இங்கு தருகிறோம்.

பூஜ்ய வினோபாஜிக்கு பீலிபீத் ஜில்லாவில் நான்கு நாள் யாத்திரையில் 12,000 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. மக்கள் குதூகலத்துடனும் பயபக்தியுடனும் வழிநெடுக வரவேற்பளித்தனர். பீலிபீத் ஜில்லா யாத்திரை பிசப்பூர் என்னும் ஊரில் முடிந்தபோது வினோபாஜி, பிரார்த்தனைக் கூட்டத்தில் மிகவும் உருக்கமாய்ப் பேசினார். சுமார் 10,000 மக்கள் மிக்க அமைதியுடன் கேட்டார்கள். வினோபாஜி பேசியதன் சுருக்கம்:-

நான் ஏழைகளின் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கிறேன். என் வாழ்நாள் முழுதும் அவர்களின் சேவையிலேயே கழிந்திருக்கிறது. இன்று அவர்களுக்காக, கிராமம் கிராமமாக, பூமிதானம் கேட்டு சுற்றிக்கொண்டிருக்கிறேன். நான் கேட்பது பிச்சையல்ல, உரிமையைத்தான் கேட்கிறேன். ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர் உற்றோருடன், மற்றும் ஒருவர் குடியிருக்கிறார், அவருக்கு உங்களுடைய பூமியில் ஒருபகுதி கொடுக்கவேண்டுமென்று கேட்கிறேன். முகம்மது நபி எதிரிகள் பின்தொடரக் காட்டில் போய்க்கொண்டிருக்கும்பொழுது, அவருடனிருந்த இரு தோழர்கள், எதிரிகள் கூட்டம் பெரியதாயிருக்கும்பொழுது மூன்று பேர் என்ன செய்யமுடியுமென்று பயந்தபொழுது, நபிகள் நாயகம், "நாம் மூன்றுபேர் மாத்திரமல்ல, நான்காவதாக ஆண்டவன் நம்முடன் இருக்கிறான்" என்று சொன்னார். அவர் முன்னால் எந்த சேனையும் எதிர்நிற்க முடியாது. அவர் காணப்படாவிட்டாலும் பக்தர்களுடன் எப்போதும் இருக்கிறார். அவர் பரமேசுவரன், அவ்யக்தர். நாம் உலக சேவையில் ஈடுபட்டால், தீனர்களின் துக்கத்தைப் போக்கினால், அவர் நமக்கு அளித்திருக்கும் புத்தி, சக்தி, சொத்து அனைத்தையும் சேவையில் ஈடுபடுத்தினால் அவர் சந்தோஷப்படுகிறார். ஆனால் நாம் சுயநலத்திற்காக வாழ்ந்து, பிறருக்கு துயரம் விளைவித்து, நமது புத்தி முதலிய சம்பத்துக்களைப் பிறரை ஏமாற்றுவதில் பயன்படுத்தினால் அவர் துயரப்படுகிறார். நாம் அவரிடமிருந்து ஒன்றையும் ஒளிக்கமுடியாது. நாம் அவரைப் பார்க்காவிட்டாலும், அவர் நம்மைப் பார்க்கிறார். அவர் நம் இதயத்திலும், வீட்டிலும், வெளியிலும் இருக்கிறார். நாம் சுயநலத்தை மறந்து பிறர் சேவையில் நம்மை அர்ப்பணித்தால் மனதில் எத்தனை ஆனந்தம் உண்டாகும்!

நம்முடைய தேசம் புராதனமானது; புண்ணியம் வாய்ந்தது. பத்தாயிரம் வருஷங்களாக ஞானிகளும் ரிஷிகளும் வாழ்ந்த நாடு. உலகில் இந்திய சரித்திரம் பிரசித்தமானது. பிற்காலத்தில் பலவிதமான பிளவுகள், ஜாதி வித்தியாசங்கள், தரித்திரம், அஞ்ஞானம் முதலியன மிகுந்து விட்டாலும், உயர்வும் தாழ்வும் மாறி மாறி வருகின்றமையால் நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஆண்டவன் கிருபையால், பெரிய மகான்களும் அறிஞர்களும் நம் நாட்டில் அவ்வப்போது அவதரித்துக்கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி

நம்மிடையில் தோன்றி பெரிய வல்லரசுடன் போராடியதால் சுதந்திரம் பெற்றோம். மற்ற தேசங்களிலும் சுதந்திர தியாகம் நடந்திருக்கிறது. ஆனால் இந்தியச் சுதந்திர சரித்திரம் உலகிலேயே புதிது; நமக்கும் பெருமையளித்தது. ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு மோசமான நிலைமைக்கு வந்திருக்கிறோம். தன்னை விட்டுப் பிறரை நிந்திப்பது எங்கும் நடக்கிறது. தண்ணீர் தெளிந்து சுத்தமாகக் காணப்பட்டாலும் அடியில் சகதியிருந்தால் கால் வைத்ததும் தண்ணீர் கலங்கிவிடுகிறது போல, சுயராஜ்யம் வந்தபிறகு நம்மில் இருந்த கேடுகள் வெளிவருகின்றன. இது நல்லதே. வியாதியின் குணம் வெளிப்பட்டால் சிகிச்சைக்கு உதவியாக இருக்கும். நம்மில் அமுங்கிக்கிடக்கும் குணங்கள் வெளிவருவது நல்லது. சுதந்திரத்திற்குப் பிறகு மோசமாகிவிட்டோம் என்று அதிருப்தி அடைய வேண்டியதில்லை. நாம் சுத்த சத்திய எண்ணங்களைத் தூண்டவேண்டும்.

இந்தியாவின் விசேஷம் ஆத்மிக வித்யா. இவ்வுடல் ஆத்மாவிற்கு ஒரு கருவிதான். நாம் வீட்டில் குடியிருப்பது மாதிரி ஆத்மா சரீரத்தில் குடியிருந்தாலும், அதிலிருந்து அது பிரிந்து நிற்கிறது. ஆத்மா வியாபகமானது. ஒரு வீட்டில் பலர் தனித்தனி வீட்டில் குடியிருந்தாலும் வீடு எல்லோருக்கும் சொந்தமானது. நாம் ஆத்ம சொரூபிகள்; பலபல உடலில் குடியிருந்தாலும், இந்த உலகம் முழுதும் நம் வீடு. சரீரந்தான் பிரிந்திருக்கிறதே யொழிய, நாம் எல்லோரும் சேர்ந்து வாழ்கிறோம். எல்லோரும் ஆத்மாவில் ஒருமைப்பட்டிருக்கிறோம். உலகம் முழுதும் வியாபித்திருக்கிறோம் என்ற எண்ணம் உண்டாகிவிட்டால், யார் யாரை நிந்திப்பது? நம் அன்பை எல்லோரிடத்தும் செலுத்தவேண்டியிருக்க, குடும்பத்திற்குள் கட்டுப்படுத்தியிருக்கிறோம். உலகத்திலுள்ள குழந்தைகள் அனைத்தும் நம்முடையன என்ற எண்ணம் வந்துவிட்டால் அதனால் விளையும் ஆனந்தத்தை வேறு வகைகளில் எப்படி அளவிடமுடியும்? ஒரு அனாதைக் குழந்தை, ஹரிஜன், அல்லது அகதிக் குழந்தையிடம் அன்பு செலுத்தினால் சொந்தக் குழந்தையிடம் அன்பு செலுத்துவதைக்காட்டிலும் ஆனந்தமாயிருக்கும். தேகத்துடன் ஆத்மாவைப் பந்தப்படுத்தி அன்பைச் சுருக்கிவிடாதீர்கள். உடல், மனம், ஆத்மா இவைகளுடன் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்து நடந்துகொள்ளுங்கள்.

நிலப் பிரசினை முக்கியமாக இருக்கிறது. நிலம் இல்லாத ஏழைகள் மிகுந்திருப்பதால் நான் கிராமம் கிராமமாகச் சுற்றுகிறேன். தண்ணீர் காற்று சூரியன் இவை ஆண்டவன் படைப்பு, அவனுடைய சந்ததியார் அனைவருக்கும் பொதுவானவை. சிலரிடத்தில் ஏராளமான நிலமும், பலர் ஒன்றுமில்லாமலிருப்பதும் கடவுள் விருப்பத்திற்கு விரோதமானது. உங்களுடைய நிலத்தில் ஒருபகுதியை ஏழைகளுக்கென்று உணர்ந்து உள்ளன்புடன் கொடுத்தால் நீங்கள் இழந்துவிடுவது ஒன்றுமில்லை. எந்த நாளில் வந்த விருந்தினருக்கு இருந்ததைக் கொடுத்துவிட்டுப் பட்டினி கிடக்கிறோமோ அன்று நாமாகச் சாப்பிட்ட தினத்தைக் காட்டிலும் ஆனந்தம் உண்டாகிறது. பிறருக்காக தான் சாப்பிடவில்லையென்பதில் மனதிற்குச் சந்தோஷம். ஒருவருக்குக் கொடுத்துப் பின் தான் சாப்பிடும் மனித சுபாவத்தை ரயிலில் பீடி குடிப்பவர்களிடமும் பார்க்கிறோம். சக்தியை அனுசரித்து கொடுக்கும் சுபாவம் எல்லோரிடமும் இருக்கிறது. குழந்தை குட்டிகளுடன் குடும்பப்பேற்றுடன் வாழ விரும்புவதும் மனிதனின் ஆத்மீக வியாபக முயற்சிதான். அதற்குச் சரியான வழி தெரிந்துவிட்டால் வாழ்க்கை ஆனந்தமாயிருக்கும். சிலரிடத்தில் வியாபகம் குறுகி குடும்பம் துக்ககரமாயிருக்கிறது. சிறிய குடும்பத்திலிருந்து ஆத்மா மலர்ந்து உலகம் முழுதும் வியாபிக்க வேண்டும். இந்த பிரம்ம வித்தைதான் இந்தியாவின் விசேஷம். நதி, மலைகள், இயற்கை வளங்கள் எல்லா தேசங்களிலுந்தான் இருக்கின்றன. ஆனால் இங்கு இருப்பது ரிஷி முனிவர்களின் ஆத்ம பலம். இந்தியாவின் விசேஷம் இதுதான்.

மற்ற நாடுகளில் புரட்சி நடந்து பலாத்கார வழிகளில் நிலப் பிரசினை தீர்க்கப்படுகிறது. நம் நாட்டில் புது வழி. பரமேசுவரனின் படைப்பை எல்லோரும் அனுபவிக்க வேண்டும். 'நிலத்திற்காக எத்தனை அடிதடி, சண்டைகள்; கொலைகள்! ஹைக்கோர்ட்டு வரை கேசுகள் நடக்கின்றன. நிலம் கொடுக்க யாருக்கு மனம்வரும்? கேட்டு நிலம் வாங்கி நிலப் பிரசினை எந்த நாட்டில் தீர்ந்திருக்கிறது?' என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். எனக்கு நம் நாட்டில் நிலம் சந்தோஷமாய்க் கொடுக்கிறார்கள். இது இந்தியாவின் விசேஷம். கொடுக்காவிட்டால் யார்மேலும் நிந்தனை கிடையாது. கருத்துக்கள் உங்கள் மனதில் புகுந்துவிட்டால், இன்று இல்லாவிட்டால் நாளை கொடுப்பீர்கள். கொடுத்தால் உங்களுக்கு சந்தோஷமாக இருக்கும். நான் விரும்பும் வழியில் அல்லாமல் வேறு வழியில் நீங்கள் கொடுக்க நேரிட்டால் எனக்கு துக்கமாயிருக்கும். இந்தக் கருத்துக்களை நான் ருஷியாவிலிருந்தோ சைனாவிலிருந்தோ கொண்டுவரவில்லை. இவை நம்முடைய தேசத்தின் கலாசாரத்தையொட்டிய எண்ணங்கள். உங்களுக்கு சுலபமாக விளங்கக்கூடியவை; குழந்தைகளும் விளங்கிக்கொள்கிறார்கள். என்னுடைய வார்த்தைகள் உங்களுடைய மனதில் புகுந்துவிடத்தான் செய்யும். ஆத்ம சந்தோஷத்திற்காக நீங்கள் அனைவரும் பூமி தானம் கொடுக்கவேண்டும். இது வெறும் தானமல்ல; யக்ஞமாகையால் எல்லோரும் பங்கு எடுத்துக்கொள்ளுங்கள். என் மனதில் இருப்பதைச் சொல்லிவிட்டேன். சிந்தனைசெய்து நடைமுறைக்குக் கொண்டு வருவது உங்கள் கடமை.

★ ★ ★

வினோபாஜியின் பூமிதான யாத்திரை உத்தரப் பிரதேசத்தில் பீலிபீத் ஜில்லாவில் வெற்றிகரமாக நடைபெற்றது. கொடிய குளிரையும் பொருட்படுத்தாமல் வழிநெடுக கிராம மக்கள் கூடுகின்றனர். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என்று ஒழுங்காக ரோட்டின் இரு மருங்கிலும் அணிவகுத்து நிற்கிறார்கள். "பூமி கொடுக்கும் மகாத்மா வாழ்க", "கிருஷிக்-பந்து, தீனபந்து, வினோபாஜிக்கு ஜே!" என்று கோஷித்து மலர் தூவி வணங்குகிறார்கள்.

ஏழைகளின் பூமி தானம்

யாத்திரை அதிகாலை ஐந்துமணிக்கு ஆரம்பிக்கும். சரியாக மணி ஏழு ஆனவுடன் காலை ஆகாரம் சாப்பிடுவதற்காகச் சிறிது நேரம் தங்குவது வழக்கம். அக்காலத்தில் காந்திஜி பற்பல நிதிகளுக்காக ஜனங்களிடம் கையை நீட்டுவதுமாதிரி, வினோபாஜி பூமி தானம் கேட்கிறார். "ஒரு சாண் நிலத்திற்கு எத்தனை அடிதடி, கொலைகள், ஹைக்கோர்ட்டு வரை கேசுகள் நடக்கின்றன. பூமி தானம் கொடுக்க யாருக்கு மனம்வரும்? தானம் கொடுத்து எந்த தேசத்தில் நிலப்பிரசினை தீர்க்கப்பட்டிருக்கிறது?" என்று பொதுவுடைமை வாதிகள், பூமி தான இயக்கத்தைப் பயனற்றது என்று சொல்கிறார்கள். மற்ற நாடுகளில் நடக்காதிருக்கலாம். ஆனால் இந்தியாவில் நடக்கிறது. 10—1—'52-ந்தேதி மாதவதாண்டா என்ற இடத்திலிருந்து பூரன்பூர் என்ற அடுத்த தங்கும் இடத்திற்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, காலை ஆகாரத்திற்காக வினோபாஜியும் அவர் குழுவினரும் சிறிது நேரம் தங்கினர். பக்கத்தில் கிராமங்கள் இல்லையானாலும், தூரம் தொலைவிலிருந்து கிராம ஜனங்கள், அந்த அதிகாலையில், சுமார் 300 பேர்வரை கூடிவிட்டார்கள். சுப்பி சருகுகளைக் கொளுத்திக் குளிர்காய்ந்து கொண்டு, வினோபாஜியின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். வினோபாஜி காலையில் ஒரு கிண்ணம் தயிர் சாப்பிடுவது வழக்கம். அதை அருந்திக்கொண்டே, "நீங்கள் கோஷிப்பதாலும், மலர் மாலை கொடுப்பதாலும் என்ன பயன்? பூமி தானம் கொடுத்தால் எங்கள் சாப்பாடு அமிர்தமாகும்" என்று பூமி கேட்க ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரந்தான் தாமதம். நான்குபேர் பூமிதானம் கொடுக்க முன்வந்தார்கள். "வலது பக்கத்தினர் தானம் கொடுத்தார்கள், இடதுபக்கத்தில் இருப்பவர்களும் கொடுங்கள்" என்று அடுத்த பக்கம் கைநீட்டினார். ஒருவர்க்கொருவர் முந்திக்கொண்டு பூமிதானம் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்! கோவில் பிரசாதம் வாங்க, அல்லது மகாத்மாவின் காலைத் தொட்டு வணங்க இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடி விழுவார்கள். ஆனால் இங்கு பூமி கொடுத்து வணங்குகிறார்கள். 64 பேர் 50 ஏக்கர் வரை அந்த அதிகாலையில் பூமி

தானம் வழங்கினர். இரண்டு பிகா (6 பிகா-ஒரு ஏக்கர்) கொடுத்த சிறிய விவசாயிகள் தான் அதிகம்.

முஸ்லிம் ஜமீன்தாரின் 7500 ஏக்கர் பூமிதானம்

மத வேற்றுமையின்றி முஸ்லிம், சீக்கியர், ஹிந்துக்கள் அனைவரும் பூமிதானம் வழங்கினர். பூரன்பூரில் ஒரு முஸ்லிம் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் 2500 ஏக்கர் வீதம் 7500 ஏக்கர் விநோபாஜியிடம் பூமிதானம் வழங்கினர். மாதவ-தாண்டா கிராமத்தில் தங்கியிருந்தபோது, அங்கு பூமிதானம் கொடுக்கமுடியாத ஒரு முஸ்லிம் அம்மையார், அடுத்த நாள், பத்து மைல் நடந்துவந்து, பூரன்பூரில் 4 ஏக்கர் பூமிதானம் கொடுத்துவிட்டுச் சென்றார். பீலிபீத் ஜில்லாவில் இதுவரை, ஆறு தினங்களில், 12,000 ஏக்கர் கிடைத்திருக்கிறது.

அஹிம்சா புரட்சி இயக்கம்

"பூமிதானம் ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாத ஏழைகளுக்கு பூமிதானம் வழங்குவது இப்போதுதான் நடைபெறுகிறது. பூமிதானம் கொடுப்பதும் அதற்காக கூட்டங்கள் கூடுவதும் கிராமங்களில் இதுவரை நடவாதது. இந்த இயக்கம் உலக சரித்திரத்திலேயே புதுமையானது. இது ஒரு யக்ஞமாகையால் அனைவரும் பங்கு எடுத்துக்கொள்ளுங்கள். சூரியன், காற்று, தண்ணீர் இவை நாம் எல்லோரும் அனுபவிக்க ஆண்டவனால் படைக்கப்பட்டவை. நாம் சமுதாயத்தில் ஒரே குடும்பமாக அன்பினால் பிணைக்கப்பட்டு, எல்லோரும் அனுபவிக்கவேண்டும்" என்ற விநோபாஜியின் கருத்துக்கள் மக்கள் மனதில் பதிந்து வருகின்றன. "கங்கையில் கிளை நதிகள் கலந்துகொண்டேயிருக்க, கங்கையின் வேகம் அதிகமாவதுபோல, மக்கள் பூதானம் கொடுத்துக் கொண்டேயிருந்தால் இயக்கம் நாடு முழுதும் வியாபித்துவிடும். சிறிய தானங்களும் சிறந்தவைதான். சிறு துளிகள் சேர்ந்துதானே பெரு வெள்ளமாகிறது" என்று விநோபாஜி சொல்வதுபோல், நாளுக்குநாள், பூமிதான இயக்கம், பொருளாதார சுதந்திர இயக்கமாகப் புது வேகத்தில் கிராமாந்திரங்களில் பெருக்கெடுத்து வருகிறது.

★ ★ ★

விநோபாஜியின் பூதான இயக்கம் உத்தரப் பிரதேசத்தில் பதாயூம் ஜில்லாவில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஜில்லாவில் கிராமங்களில் பஜனை கோஷ்டிகளுடன் வரவேற்பளித்தது குறிப்பிடத்தக்கது. விநோபாஜி பஜனையில் தன்னை மறந்து லயித்துவிடுவார். கால்நடையாக வருபவர்களுக்கு பஜனையும் பாடலும் பேரானந்தமாயிருக்கும். விநோபாஜியைத் தரிசிக்கவும் பிரசங்கத்தைக் கேட்கவும் தினமும் ஆயிரக்கணக்கானபேர் கூடுகிறார்கள். பதாயூம் நகரில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் விநோபாஜி "தேர்தல் இன்னும் சில தினங்களில் முடிந்துவிடும், ஆயினும் பூதான யக்ஞப் புரட்சி இயக்கம் தொடர்ந்து நடக்கும்" என்று தெரிவித்தார். சுதந்திரத்திற்குப் பிறகு லட்சியம் ஸர்வோதயமே என்பதை விளக்கும்போது அவர் பேசியதாவது:

"சுதந்திரம் வந்து 4 வருஷங்களாகிவிட்டது. சுதந்திரம் பெறுவது முதல் பிரசினையாக இருந்தபடியால், எல்லோரும் காந்திஜியின் தலைமையில் ஒன்றுபட்டு, போராடி சுதந்திரம் பெற்றோம். அரசியல் சுதந்திரத்துடன் நம் எல்லா வேலைகளும் முடிந்துவிடவில்லை. நிலத்தை இழந்தவன், கோர்ட்டில் வாதாடி, நிலத்தைப் பெற்றவுடன் அறுவடை செய்ய முடியாது; உழுது பண்படுத்தி விதைக்க வேண்டும். அவ்விதம், சுதந்திர நாட்டிலும் இனிமேல்தான் நம் வேலை ஆரம்பமாகிறது. ஜாதி, மத, மாகாண அபிமானங்களால் மனப்பான்மை குறுகிவிடக்கூடாது. உலகப் பிரசினைக்கேற்ப லட்சியங்கள் அமையவேண்டும். நம் தேசத்தில் அகண்ட பிரவாகமாக இருப்பது அத்தியாத்மிகம். இப்போது உலகத்திற்கு வேண்டுவதும் அதுவே. நமக்கு புது லட்சியமும் கொள்கையும் இருந்தால்தான் புத்துணர்ச்சியும் உத்வேகமும் இருக்கும். அந்த லட்சியந்தான் 'ஸர்வோதயம்.' ஸர்வோதய சமுதாயத்தில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும் வாழ்க்கை வசதியும் இருக்கும். நாம் இனி கர்மயோக சிந்தனையுடன் வேலை செய்யவேண்டும்."

பலாத்கார வழி தேசத்திற்கு ஆபத்து

"அரசியல் சுதந்திரத்திற்குப் பின் பொருளாதார சுதந்திரம் அவசியம். உற்பத்திப் பெருக்கும், உற்பத்தியான பொருள்கள் எல்லோருக்கும் வேண்டிய அளவு தகுந்த சமயத்தில் கிடைக்கவும் வேண்டும். உற்பத்திப்

பெருக்கிற்கு, உழைப்பவரிடம் நிலம் இருக்க வேண்டும். உழைப்பவர்கள் தொழிலாளிகளாகமாத்திரம் இருந்தால் உற்சாகம் இராது; உற்பத்தி குறையும். நிலம் இல்லாதவர்கள் அனைவருக்கும் நிலம் கிடைக்கவேண்டும். அதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று பலாத்கார வழி. ஆனால் அந்த வழியில் பிரசினை தீராது.

"தெலுங்கானாவில் நடந்த பலாத்கார இயக்கம் தேசம் முழுதும் நடந்தால், நாம் அழிந்துவிடுவோம். பலாத்கார வாதிகள் வர்க்க பேதத்தைக் கிளப்புகிறார்கள். இது தவறான வழி. ஏழை, பணக்காரர் எல்லோரிடத்திலும் குணம், குற்றம் இரண்டும் இருக்கிறது. குண தோஷங்கள் எல்லோரிடமும் இருக்கின்றன. மக்களிடத்திலுள்ள துர்க்குணங்கள் வெளிப்பட சந்தர்ப்பம் ஏற்படாது. நற்குணங்களை ஆகர்ஷித்து வேலை செய்ய வழி வகுக்கவேண்டும். நான் நிலப் பிரசினை தீர்வதற்கு சாந்தி வழியில் மக்களிடத்தில் அன்புமயமான தூய சத்பாவங்களைக் கிளப்புவதில் ஈடுபட்டிருக்கிறேன். பூமிதான இயக்கம் அன்பு,சேவை, சகோதரத்துவ உணர்ச்சியை வெளிப்படுத்தும் அஹிம்சா புரட்சி இயக்கம்."

நிலப் பிரசினை மிக முக்கியம்

"அன்பு வழியில் நிலப் பரிவர்த்தனை நடக்கா விட்டால், ஜனங்கள் வேறு வழியில் தீர்க்க முற்படுவார்கள். இனிச் சும்மா இருக்கமாட்டார்கள். நிலப் பிரசினை தீர்ந்துதான் ஆக வேண்டும். ஆனால் பலாத்கார வழியில் தீர்ந்தால் இந்தியாவுக்கும் உலகிற்கும் பெரிய நஷ்டம்" என்று வினோபாஜி எச்சரித்தார். ஆனால் இந்தியாவின் பண்பு, நாகரிகத்திற்கேற்ப சாந்திமய கிராந்தி —அன்புப் புரட்சி— அமைதியாக நடக்கிறது. பூமிதான யக்ஞம் வெற்றிகரமாக நடக்கிறது. வினோபாஜிக்கு அன்பு உணர்ச்சியுடன் பூமிதானம் வழங்குகிறார்கள். "உங்கள் குடும்பத்தின் ஒரு மகனாக, அன்பினால் கேட்கிறேன்; உரிமையுடனும் கேட்கிறேன். நான் தானம் கேட்கவில்லை; தரித்திர நாராயணனின் பிரதிநிதியாக உரிமையைக் கேட்கிறேன். காணப்படாமல், அவ்யக்தராக, ஏழை பணக்காரர் எல்லோருடைய வீட்டிலும் அவர் இருக்கிறார். செல்வர்கள் பெரிய பங்கு, ஏழைகள் சிறிய பங்கு கொடுங்கள்" என்று கேட்கும் கடவுள் பக்தருக்கு, ஆத்மீக புருஷருக்கு, நிலம் கொடுத்து வணங்குகிறார்கள். இதுவரை சுமார் ஐயாயிரம் பேர் ஏறக்குறைய 60,000 ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். இந்த பதாயூம் ஜில்லாவில் இரண்டு தினங்களில் 460 ஏக்கர் கிடைத்திருக்கிறது. இது பெரிதல்ல; ஆனால் புரட்சிக் கருத்துக்கள், பொருளாதார சுதந்திரத்துக்குப் புது வழி, அஹிம்ஸா இயக்கம் வெகு விரைவில் பரவி வருகிறது.

★ ★ ★

உத்தரப் பிரதேசத்தில் உஜ்ஜானி என்ற இடத்தில் காலஞ்சென்ற ஹைதராபாத் பிரதம மந்திரி மகராஜ் கிஷன் பிரபாத் அவர்களின் குமாரி, ஸ்ரீமதி கிஷன் குன்வர் பீபீ ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் ஜில்லாவில் தனக்குச் சொந்தமான ஆறு கிராமங்களையும் வினோபாஜியிடம் பூதானத்திற்காக அளித்தார். இதுவரை கிடைத்த தானங்களில் இதுவே பெரிய தானம்.

அடுத்த நாள் பிரயாணத்தில் கங்கையைக் கடந்து கொண்டிருக்கும்போது வினோபாஜி என்னிடம் "பார்த்தீர்களா! உத்தரப் பிரதேசத்திலிருக்கும்போது ஆந்திராவில் நிலம் கிடைக்கிறது" என்றார்.

"தமிழ்நாட்டிலிருந்தும் தங்களுக்குக் கிடைக்கும்" என்று பதில் சொன்னேன். வினோபாஜி மிகுந்த உற்சாகத்துடன், "ஆம், பகவான் ராமபிரான் அருள் எங்கும் வேலை செய்யும்" என்றார்.

நம் நாட்டில் பொருளாதார இயக்கம் அன்புவழியில் ஆரம்பமாகியிருக்கிறது. இதன் பிரயோகம் நாடு முழுதும் பரவிக்கொண்டிருக்கிறது. அரசியல் சுதந்திரத்திற்கு காந்திஜி புது வழிகாட்டி உலகை உய்விக்க வந்தார். அவர் வழி நிற்கும் வினோபாஜி பொருளாதார சுதந்திரத்திற்கும் புது வழி வகுத்து வருகிறார். இவ்வியக்கத்தை உலகம் வியந்து உற்றுநோக்கி வருகிறது. தமிழ்நாட்டிற்கு வினோபாஜி வருவதற்கு முன்பே பூமிதானம் கொடுத்து அவரை வரவேற்கத் தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருப்பார்கள். பூமிதானம் கொடுக்க விரும்பும் அன்பர்கள் தந்தி அல்லது கடிதத்தின் மூலம் பிப்ரவரி 15-ந்தேதி வரை "ஷாஜஹான்பூர், உத்தரப் பிரதேசம்" என்ற விலாசத்திற்கு வினோபாஜிக்கு அறிவிக்கலாம். ★ ★ ★

"அப்பனே, அடியேனை உன் சேவகியாக ஏற்றுக்கொள்" — மீரா

ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு

[சர்க்கா சங்கம் 5—9—'51-உ செய்த ஒரு முக்கியமான தீர்மானப்படி சங்கத்தின் ஊழியர்களை, மாதம் குறைந்தது 24 மணி நேரம் கூலி வேலை செய்பவருடன் கலந்து வேலை செய்து அதே கூலியைப் பெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இதன் நோக்கத்தை ஸ்ரீ மஜூம்தார் முன்னமே விளக்கியுள்ளார்; இதுவும் தீர்மானமும் '51 அக்டோபர் மாதம் கதர் மலரில் வெளிவந்தன. தீர்மானத்தின் சில முக்கிய தாத்வீக, ஆத்மீக லாபங்களுடன், அனுபவபூர்வமாக ஏற்படும் நன்மைகளையும் விளக்கி பூஜ்ய ஜாஜூ நவம்பர் '51 ஸர்வோதயத்தில் ஹிந்தியில் எழுதியதின் மொழிபெயர்ப்பு இக்கட்டுரை.]

இக் கட்டுரை சாதாரணமாக புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்காக, அதிலும் முக்கியமாக எல்லா அம்சங்களிலும் புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் நிர்மாண ஊழியர்களுக்கு எழுதப் படுகிறது. தேசத்தின் நன்மைக்காகச் செய்யப் படும் வேலைகள் யாவும் நிர்மாண வேலை யென்று அழைக்கப் படும். ஆனால் ஸர்வோதய சமாஜத்தவர்கள் நிர்மாண வேலையைக் குறிப்பிடும் போது ஸர்வோதய சமூகத்தை நிறுவுவதற்கு உபயோகமாக இருக்கும் வேலைகளை, அதாவது காந்திஜி சொல்லிய நிர்மாண வேலையைக் குறிக்கிறது. இம்மாதிரி வேலைகளில் முழு நேரமோ, அல்லது சிறிது நேரமோ ஈடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கு விசேஷமாக இக் கட்டுரை எழுதப் படுகிறது. இதில் எழுதப் பட்ட வேலைத் திட்டம் ஆரம்பமாகும் நம்பிக்கையை அவர்களிடந் தான் அதிகமாக எதிர் பார்க்கலாம். நிர்மாண ஊழியர் தனது சமூக சேவையை ஈஸ்வர பக்தியாகக் கருதிச் செய்ய வேண்டும். ஈஸ்வரனை தரிசிக்க வேண்டுமானால் அவனிடமிருந்து தோன்றிய இந்த சிருஷ்டியிலேயே தரிசிப்பது மேலானதாகும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனசமூகத்திற்குச் செய்யும் சேவையே ஈஸ்வர பக்திக்குரிய உத்தமமான முறையாகும். மேலே எழுதப் பட்டிருக்கும் தலையங்கம் பக்த மீராவின் கீர்த்தி பெற்ற ஒரு பஜனையின் முதலடி. அவர் தன்னை சரீரத் தொண்டு செய்பவராக ஏற்றுக் கொள்ளும்படி ஈஸ்வரனைப் பிரார்த்திக்கிறார். 'சாகர்', 'நௌகர்' என்ற இரண்டு வார்த்தைகளிலும் அர்த்த வேறுபாடு இருக்கிறது. "சாக்ரி" என்ற வார்த்தைக்கு சரீரத்தினால் ஊழியம் செய்வது என்ற பொருளாகும். நிர்மாண ஊழியர்களும் இம்மாதிரி சரீரத்தினால் ஊழியம் செய்யும் வேலையைத் தேடவேண்டியது அவசியமாகும்.

அவர்களுக்கு சர்க்கா சங்கத்தில் சமீபத்தில் நிறைவேறிய தீர்மானத்தைப் பற்றி நினைவுறுத்த விரும்புகிறேன்.

சரீர உழைப்பின் மதிப்பை மாத்திரம் உணர்ந்தால் போதாது. உழைப்பாளி வர்க்கத்தின் மதிப்பையும் உணர்ந்து அதனுடன் இரண்டறக் கலக்கும் நோக்கத்துடன் நாம் சரீர உழைப்பில் ஈடுபடவேண்டும். அதற்காக சங்கத்தின் தொண்டர்கள் சரீர உழைப்பில் ஈடுபடும் இதர தொண்டர்களுடன் சேர்ந்து உழைப்பார்கள் என்று சங்கம் எதிர்பார்க்கிறது. அத்துடன், நமது ஸ்தாபனத்திற்கு வெளியில் உழைப்பாளி வர்க்கத்துடன் சேர்ந்து மாதம் 24 மணி நேரம் சரீர வேலை செய்து அதில் கிடைக்கும் ஊதியத்தைச் சங்கத்தின் நிதியில் வரவு வைக்கும்படிக் கோருகிறது. இம்மாதிரி உழைப்பாளியாக உழைப்பாளி வர்க்கத்துடன் சேர்ந்து சங்கத் தொண்டர்கள் வேலை செய்வதன் மூலம் வர்க்க பேதமற்ற சமூக லட்சியத்தை நோக்கி நாம் வேகமாக முன்னேற முடியும்.

தத்துவமும் அமுல் நடத்தும் மார்க்கமும்

இத்தீர்மானத்தின் முதல் பாகத்தில் தத்துவார்த்த முன்னுரையைக் கொடுத்து, அதன் அடுத்த பகுதியில் அந்தத் தத்துவங்களை அமுல் நடத்தும் முறையில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தீர்மானம் சர்க்கா சங்கத் தொண்டர்களைக் குறித்து எழுதப்பட்டபோதிலும் எல்லா நிர்மாண ஊழியர்களும் கவனிக்கத் தகுந்ததாகும்.

இந்த வேலைத் திட்டத்தில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவையாகும்: ஒன்று, மாதத்தில் குறைந்தபட்சம் 24 மணி நேரம் சரீர உழைப்புச் செய்வது; அந்த சரீர உழைப்பு வேலையை மற்றவர்களிடத்தில் கூலியைப் பெற்றுக் கொண்டு செய்வது இரண்டாவதாகும்.

வேலையின் அளவு

சாதாரணமான பலமுள்ள மனிதர்கள் ஒரு நாளைக்கு ஆறு மணி முதல் எட்டு மணி நேரம் வரை வேலை செய்ய முடியும், அதாவது 24 மணி நேர வேலை மூன்று அல்லது நான்கு நாட்களில் முடிந்துவிடக் கூடும். புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் சரீர உழைப்புச் செய்து பழக்கம் இல்லாத காரணத்தால், நாள் முழுவதும் நான்கு மணி நேரத்திற்கு அதிகமாக வேலை செய்ய முடியா திருக்கலாம். இந்நிலைமையில் அதிக நாட்கள் வேலை செய்ய வேண்டியிருக்கும். தொடர்ச்சியாக ஒவ்வொரு தினமும் வேலை செய்ய வேண்டுமென்பதில்லை. அவகாசமும், வேலையும் கிடைக்கும்போது செய்யலாம். ஒரு நாளில், ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரந்தான் வேலை செய்வதற்கு அவகாசமும் சக்தியும் இருக்கிற தென்றால் அம்மாதிரியும் செய்யலாம். ஆனால், இது வேலை முறையிலும், வேலை கொடுப்பவரின் விருப்பம், வசதியைப் பொறுத்தும் இருக்கும். தொண்டர் தனது வேலைத் திட்டத்தை எல்லா சூழ்நிலையையும் ஆலோசித்தே தயாரிக்க வேண்டியிருக்கும்.

வேலை கிடைப்பதைப் பற்றி சந்தேகம் கொள்ளக் கூடாது. கிராமத்தில் விவசாயம் முதலிய அநேக வேலைகள் நடைபெறுகின்றன. பருவ காலங்களில் விசேஷமான வேலைகள் நடக்கின்றன. அப்பொழுது கூலியாட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று கருதுகிறார்கள். நகரங்களில் வீடு கட்டுதல், ரோடு போடுதல், தொழிற்சாலை முதலிய அநேக வேலைகள் நடைபெறுகின்றன. அதில் தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். தச்சர், கொத்தர் முதலிய திறமையான தொழிலாளர்களின் வேலையை எல்லோரும் செய்யமுடியாது. ஆனால் கல், மண், சாமான் சுமத்தல் போன்ற சாதாரண சிற்றாள் கூலி வேலையை ஒவ்வொருவரும் செய்ய முடியும்.

பிறரிடத்தில் கூலி வேலை செய்வது

கூலி பெற்றுக்கொண்டு மற்றவர்களிடத்தில் வேலை செய்யவேண்டுமென்பது வேலைத் திட்டத்தின் மற்றொரு அம்சமாகும். வேலைத் திட்டத்தின் இந்த அம்சம் முக்கியமானது. கொஞ்ச காலமாக சரீர உழைப்புக்குரிய மதிப்பை அதிகப்படுத்தும் நோக்குடன் முன்பு சரீர உழைப்புச் செய்யாத அநேக தொண்டர்கள் தங்களுடைய வீட்டிலோ, அல்லது ஸ்தாபனத்திலோ, வீடு அக்கம் பக்கத்திலுள்ள இடம் சுத்தம் செய்தல், விவசாய வேலை முதலியவைகளைப் போன்ற ஏதாவது சில சரீர உழைப்பு வேலைகள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த தனிப்பட்ட அல்லது ஸ்தாபனத்தினுடைய வேலைகளைத் தவிர, பொதுஜன ஊழியமாகிய கிராமத் துப்புரவு, ரோடு மராமத்து, அணை கட்டுதல், உரக்குழி தயாரித்தல் முதலிய சமூக வேலைகளில் அவர்கள் நியமமாகவோ, அல்லது சமயா சமயங்களிலோ கலந்து கொள்ளவும் ஆரம்பித்திருக்கிறார்கள். இவையெல்லாம் போற்றத்தக்கதுதான். இம்மாதிரியான வேலைகள் அதிகமாகப் பரவ வேண்டும். ஆனால் தீர்மானத்தில் எழுதியுள்ள வேலைத் திட்டத்தினுடைய மகத்துவம் இதைக் காட்டிலும் விசேஷமானது.

உழைப்பவர்களின் வாழ்க்கையுடன் ஒன்றறக் கலப்பது

நம்முடைய சமூக வர்க்க பேதங்களில், புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கும் உழைத்து வாழ்க்கை நடத்துபவர்களுக்கும் உள்ள வர்க்க பேதம் மிகவும் பெரிதாகும். புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் உயர்ந்தவர்களாகவும், உழைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் தாழ்ந்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள். உழைப்பது கேவலம் என்று எண்ணக்கூடிய சில விஷயங்கள் நமது பண்பில் பரம்பரையாக நிறைந்திருக்கின்றன. மற்ற தேசங்களில் உழைப்பதை இம்மாதிரி எண்ணுவதில்லை. இங்கு உழைப்பவர்கள் சிறியவர்களென்றும் உழைக்காதவர்கள் பெரியவர்களென்றும் கருதப்படுகிறார்கள். நிற பேதத்திலும், ஜாதி வித்தியாசத்திலும், இவ்விஷயம் இருக்கிறது. உழைப்பை அனைவரும் தவிர்க்க வேண்டும்

என்று விரும்புகிறார்கள். ஆனால் மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, வீடு முதலியவை தேவையாக இருக்கின்றன. இவைகளெல்லாம் உழைக்காமல் உற்பத்தியாகவே முடியாது. பெரும்பாலும் ஏழைகள் அனைவரும் சரீர உழைப்பு வேலை செய்கிறார்கள். ஆனால், உழைக்கவில்லையானால் உயிர்வாழ்வது கஷ்டமாகிவிடும் என்பதை உணர்ந்து, வேறு வழியில்லாமையால் அவர்கள் வேலை செய்கிறார்கள். பணக்காரர்கள் தங்களுடைய பணத்தின் சக்தியால் மற்றவர்கள் உழைத்து உற்பத்தி செய்த பொருள்களை விலைக்கு வாங்கி சுகமாக இருக்க முடிகிறது. அதனால் உழைப்பாளிகள் சுரண்டப்படுகிறார்கள். உழைப்பவர்கள் மிகவும் கஷ்டத்துடன் தங்கள் வாழ்க்கையை நடத்தும்பொழுது புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் தமது பணம் அல்லது புத்தியின் சக்தியைக் கொண்டு அதிகப் பணம் சம்பாதிக்கிறார்கள். சமூகத்தை உயிர் வாழச் செய்வதற்குரிய பொருள்களைத் தயாரிக்கும் உழைப்பாளி அரை வயிற்றுச் சோறுடன் இருக்க, உழைக்காமல் அவைகளை அனுபவிக்கிற புத்தியைக்கொண்டு வாழ்க்கை நடத்துவோர் சுகமாக இருக்கிறார்களென்றால் இது ஆச்சரியமாக இல்லையா? புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் பெரியவர்களாகவும் மதிப்பிற்குரியவர்களாகவும், உழைப்பாளிகள் அற்பமாகவும் கருதப்படுகிறார்கள். இந்த சமூக விஷயம் நன்மை பயப்பதாக ஆக முடியுமா? உழைப்பவர்களும் உழைக்காமல் புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களாக வேண்டுமென்று விரும்புகிறார்கள். எல்லோரும் இம்மாதிரி யாகிவிட்டால் சமூகம் ஒரு நாளைக்காவது நிலைத்திருக்க முடியுமா?

புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களைக் காட்டிலும் உழைப்பவர்களின் வாழ்க்கை அதிக கௌரவமானது என்ற புரட்சி நமது சமூகக் கருத்தில் ஏற்பட வேண்டியது அவசியமாகும். புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் சில அம்சங்களிலாவது உழைப்பாளிகள் ஆவது இதற்கு ஒரு பயனுள்ள உபாயமாகும். அவர்கள் மற்றவர்களிடத்தில் கூலியைப் பெற்றுக்கொண்டு வேலை செய்வது அதிக பயனளிக்கக்கூடியதும், பிரத்தியட்சமானதுமாகும்.

சமூக – பொருளாதாரக் குறைக்குப் பரிகாரம்

சமூகத்தில் கௌரவமாகக் கருதப்படக் கூடிய புத்தியைக்கொண்டு வாழ்க்கை நடத்துவோர் சிறிது நேரமாவது சாதாரண கூலியாளைப் போன்று வேலை செய்வார்களானால் சமூக மனப்பான்மையில் எவ்வளவு பெரிய மாறுதல் ஏற்படும் என்று வாசகர்கள் கற்பனை செய்து பார்க்கட்டும். சரீர உழைப்பு வேலை செய்வதற்கு யாருடைய மனதிலும் தயக்கம் இருக்காது. இன்று ஏற்பட்டிருக்கும் அதிகமான விலையேற்றத்தினாலும், தேவையான பொருள்கள் குறைவாகக் கிடைப்பதன் காரணத்தினாலும் சிறிய வகுப்பு நடுத்தர வர்க்கத்தார் அதிகமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அதிகமானவர்கள் வேலையின்றி உட்கார்ந்திருக்கிறார்கள். அநேக இடங்களில் கூலியின் அளவு நன்றாக இருந்தபோதிலும் சரீர உழைப்பு வேலைகளுக்கு கூலியாட்கள் குறைவாகவே கிடைக்கிறார்கள். சமூகப் பரம்பரையின் காரணமாக இந்த நடுத்தர வர்க்கத்து ஆண்கள் பெண்கள் இருவருக்கும் உழைத்து வயிறு வளர்க்கக் கூடிய மார்க்கம் தடைப்பட்டிருக்கிறது. நமது மாணவர் வர்க்கத்தைப் பாருங்கள். பரம்பரையாக உழைப்பு வாழ்க்கை நடத்தக் கூடிய உழைப்பாளிகளின் மக்கள், படித்துவிட்டால், அவர்கள் தங்கள் கைத்தொழில், வீட்டு வேலை முதலியவைகளை விட்டு விட்டு புத்தியைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் ஆக முயற்சிக்கிறார்கள். கல்விகற்கும் காலத்திலும் பாதிக்காலம் விடுமுறையிலேயே கழிகிறது. ஆனால் அவர்கள் பெரும்பாலும் உழைப்பு வேலை செய்வதில்லை. உபகாரச் சம்பளத்திற்காக முயற்சி செய்துகொண்டிருப்பவர்களும், பிறரிடத்தில் உதவிகோரியோ, அல்லது அவர்களோ அவர்களின் பெற்றோர்களோ கடன் வாங்கி படிப்பைத் தொடர்ந்து நடத்தக்கூடிய அதிகமான ஏழைகள் அவர்களில் இருக்கிறார்கள். ஆனால் விடுமுறை காலத்தில் கூட கூலி வேலை செய்து சிறிது சம்பாதிக்க வேண்டுமென்று விரும்புவது இல்லை. வெளி நாடுகளில், விசேஷமாக அமெரிக்காவுக்குச் செல்லும் அநேக மாணவர்கள் அங்கு உழைத்துக் கூலி வேலை செய்து தமது செலவிற்கு வேண்டிய பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் நமது சமூகத்தின் எண்ணங்களோ இங்குள்ள மாணவ வர்க்கம் இம்மாதிரி சம்பாதிப்பதைத் தடுக்கின்றன. உழைப்பு வாழ்க்கை நடத்துபவர்களுக்கும் புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கும் மத்தியிலுள்ள, உயர்வு, தாழ்வு என்ற மனப் பான்மை நீங்கி, புத்தியினால் வாழ்வோர் கூலி வேலை செய்வதில் குறையொன்றும் இல்லை என்பதை உணரும்போது தான் இந்த விஷயங்களில் சீர் திருத்தம் ஏற்படுவது சாத்தியமாகும். மேலே எழுதியுள்ள தீர்மானத்தின் வேலைத் திட்டத்தில் சமூக-பொருளாதார விஷமத் தனத்தை குறைக்கக் கூடிய சக்தி இருக்கிறது.

தொழில் திறமைக்கும் தூண்டுகோல்

உழைப்பவர்கள் வேலை செய்தாலும், அதை அவர்கள் கூடுமான வரை தவிர்க்கவே விரும்புகிறார்கள். கூலியை எவ்வளவு உயர்த்திய போதிலும் அவர்கள் குறைந்த பட்ச வேலையே செய்ய வேண்டு மென்று விரும்புவார்கள். தேசத்தின் எல்லாப் பக்கங் களிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற கூக்குரல் இருந்தும், உழைப்பவர்களின் வாழ்க்கைச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்ட போதிலும் நேரிடையான வேலையில் சுமார் பாதி உற்பத்தியே ஏற்படுகிறது என்பது தான் இதனுடைய பலனாகும். இங்கிலையில் பொருள் உற்பத்தி அதிகரிக்கும் என்று எப்படி நம்ப முடியும்? தேசத்திற்கு எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? சரீர உழைப்பின் பேரில் அன்பும் நம்பிக்கையும் பெருகாமல், நம்முடைய முன்னேற்றம் எப்படி ஏற்பட முடியும்?

புத்தியைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் அறிவுடைய தொண்டர் புரட்சி நோக்குடன் தொழிலாளரைப் போன்று வேலை செய்வாரானால், அதனுடைய பிரபாவம் சாதாரணத் தொழிலாளர்களுக்கும் ஏற்படும். மேலும் உடல் உழைப்புச் செய்வத னால் அவர்களின் மனம் சீர்திருந்துவதற்கும் நியாயமாக வேலை செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

பொது நன்மைக்குரிய மார்க்கம்

தொண்டர்கள் விருப்பத்துடன் வேலை செய்யட்டும், கூலி கொடுப்பவர்களும் அதற் குரிய முழு வேலையையும் விரும்பட்டும் என் பது தான் கூலி பெற்று வேலைசெய்ய வேண் டுமென்று சொல்வதன் உத்தேசமாகும். இதைத் தவிர, நம்முடைய உழைப்பின் மதிப்பை உணர்த்துவதும் கூலி பெற்றுக் கொண்டு வேலை செய்வதில் தாழ்வு இல்லை யென்ற மனப்பான்மை சமூகத்தில் உதய மாகட்டும் என்பதுமாகும். சரீர வேலைசெய்து பழக்கமில்லாதவர்கள், அதாவது முழு வேலை யும் செய்ய இயலாதவர்களுக்கு கூலி கொடுத்து யார் வேலையில் ஈடுபடுத்துவார்கள் என்று யாரோ சந்தேகப்பட்டிருக்கிறார்கள். ஏனைய தொழிலாளர்களிடம் விரும்புவதைப் போன்று தொண்டர்களும் தாம் செய்த வேலைக்கு கணக்குக்கு அதிகமாகக் கூலியை விரும்பும்பொழுதுதான் இக்கேள்வி யெழும். ஆனால் நிர்மாண ஊழியரோ தான் செய்யும் வேலைக்கு தனக்குக் கொஞ்சம் குறை வாகவே கூலி பெற்று சந்தோஷமடைபவராக இருப்பார். வேலை கிடைக்காமல் இருப்ப தற்கு இன்னொரு காரணமும் இருக்கக்கூடும். அதாவது, மதிப்பு வாய்ந்தவர்கள் என்று கருதப்படும் புத்தியைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கு சாதாரண கூலியாட் களுக்கு கொடுப்பதைப்போன்று வேலை கொடுப்பதற்குச் சிலர் சங்கோசப்படு வார்கள். நம்முடைய நோக்கத்தைத் தெளி வாக்கும்போது சமூக நன்மையின் எண்ணம் விழிப்படைந்து, வேலை கிடைப்பது கஷ்டமாக இராது என்ற நம்பிக்கை இருக்கிறது. மிகவும் அதிகமான எண்ணிக்கையில் தொண் டர்கள் இந்த வேலைத் திட்டத்தைத் தமதாக்க மாட்டார்கள், மேலும், இம்முயற்சி முழு தும் உழைப்பாளிகளின் நன்மைக்காகவே இருப்பதன் காரணத்தினால் தவறான அபிப்பி ராயம் ஏற்படாது. புத்தியைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களும் உழைப்புமூலம் வாழ்க்கை நடத்துபவர்களும் கூடவே இருப் பதனால் அவர்களுக்குள்ள தொடர்பு அதிகரிக் கும். உழைப்பாளிகளின் கஷ்டங்கள் அதிக மாகப் புலனாகி அவைகளை நீக்குவதற்கு உதவும். இதனால் இரண்டு வர்க்கத்தினருக் கும் நன்மை ஏற்படக்கூடும்.

நமது நிர்மாண ஊழியர்கள் ஜன சமூக ரூபத்தில் தோன்றும் ஆண்டவனுக்கு வழி பாடு, இம்மாதிரி, சரீர சேவை மூலம், பக்த மீராவின் மனப்பான்மையுடன் செய்வார்கள் என்று நாம் நம்பிக்கை வைக்கலாமா?

● ● ●

★ காந்திக் காட்சிகள்: துறவும் வேஷமும் ★

காகா கலேல்கர்

[காந்திஜியுடன் 1915 முதல் நெருங்கி, தொடர்ந்து பழகிய பெரியார் ஸ்ரீ காகா கலேல்கர். காந்திஜியின் சத்திய வாழ்க்கையைப்பற்றிய நூறு சம்பவங்களை ஹிந்தியில் வர்ணித்துள்ளார். இதன் முதல் மொழிபெயர்ப்பை *'காந்திக் காட்சிகள்' என்று நாம் வெளியிட்டுள்ளோம். அதிலிருந்து ஒரு காட்சி, கீழே காண்பது.]

ஆசிரமம் ஆரம்பமான காலம். அப்பொழுது எங்கள் சத்தியாக்ரஹ ஆசிரமம் அகமதாபாதுக்கு அருகில் "கோசரப்" கிராமத்தில் இருந்தது. அங்கே ஸ்வாமி சத்திய தேவர் வந்தார். நான் அவரை ஏற்கெனவே 1911-12-ல் ஆல்மோராவில் சந்தித்திருக்கிறேன். அப்பொழுதுதான் அவர் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். அதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு நாட்டின் சுதந்திரத்திற்காக அவர் துறவு பூண்டார்.

அவர் ஆசிரமத்திற்கு வருவதற்கு முன் பல நூல்கள் எழுதியிருந்தார். அவருடைய பிரசித்தமான பெயர் 'சத்தியதேவ பரிவிஜாரகர்' என்பது. ஆசிரமத்திற்கு வந்ததும் மாலைப் பிரார்த்தனைக்குப் பிறகு அவரிடம் நாங்கள் துளஸி ராமாயணம் கேட்கத் தொடங்கினோம். ஹிந்தியினிடம் அவருக்கிருந்த பற்றைக் கண்டு பாபூ அவரை ஹிந்தி பிரசாரத்திற்கென சென்னைக்கு அனுப்பினர். ஹிந்தி பிரசாரத்தின் முதல் ஹிந்தி புஸ்தகம் சத்தியதேவர் எழுதியதே.

எங்கள் ஆசிரமம் கோசரப்பிலுள்ள வாடகை பங்களாவைக் காலிசெய்துவிட்டு சபர்மதிக் கரையிலுள்ள சொந்த நிலத்திற்கு வந்துவிட்டது. அங்கும் சத்தியதேவ்ஜி ஒரு சமயம் வந்தார். நாட்டின் சுதந்திரத்திற்காக பாபூ வேலைசெய்துவருவதைக் கண்டு சத்திய தேவ்ஜி பெருமகிழ்ச்சி கொண்டார். அவர் ஆசிரமத்தின் விருந்தாளி. நாங்கள் எங்களால் முடிந்தவரையில் அவருக்கு சேவை செய்து வந்தோம். அவருடைய சாப்பாட்டிற்காக விசேஷமான ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. அவரைத் திருப்தி செய்வதிலேயே எங்களுக்கு மிகுந்த திருப்தியேற்பட்டு வந்தது.

ஒரு நாள் சத்தியதேவர் பாபூவினிடம் வந்து, "நாம் உங்கள் ஆசிரமத்தில் சேர விரும்புகிறோம். ஆசிரமவாசியாக இருந்து வருவோம்" என்றார்.

பாபூ, "சந்தோஷம். ஆசிரமம் உங்களைப் போன்றவர்களுக்காகவே ஏற்பட்டது. ஆனால் ஆசிரமத்தில் சேர்ந்ததும் நீங்கள் இந்தக் காவி வஸ்திரங்களை மாற்றிவிடவேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதும் சத்திய தேவ்ஜிக்குப் பெருத்த வருத்தமுண்டாகிவிட்டது; மிகுந்த கோபமும் கொண்டார். ஆனால் பாபூவின் எதிரில் தம் துர்வாச ரூபத்தைக் காட்ட முடியவில்லை. "அது எப்படி முடியும்? நாம் சந்நியாசியாயிற்றே!" என்றார். அதற்கு பாபூ, "நான் சந்நியாசத்தை விடச் சொல்லவில்லை; என் கருத்தைப் புரிந்துகொள்ளும்" என்றார்.

பிறகு பாபூ அமைதியாக, "நம் நாட்டில் காஷாய வஸ்திரத்தைக் கண்டதுமே மக்கள் பக்தியோடு சேவை செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். இப்பொழுது நமது வேலை சேவை பெறுவதல்ல; சேவை செய்வதாகவே இருக்க வேண்டும், நாம் மக்களுக்கு எந்த சேவையைச் செய்ய விரும்புகிறோமோ, அதை இந்தக் காவி வஸ்திரத்தைக் காணும்போது அவர்கள் உங்களிடம் பெறமாட்டார்கள்; அதற்கு மாறாக உங்களுக்குச் சேவை செய்யவே முற்படுவார்கள். ஆகவே, நமது சேவை நோக்கத்திற்குத் தடையாயிருக்கும் ஒன்றை நாம் எதற்காக வைத்திருக்க வேண்டும்? துறவென்பது மனதைப் பற்றிய விஷயம்; மனதில் உறுதி செய்துகொள்ள வேண்டியதொன்று. வெளியில் அணியும் உடுப்புக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? காவி ஆடையை விடுவதனால் மனதிலுள்ள துறவு போய்விடுமா? நாளைக்கு நாம் எழுந்து கிராமத்திற்குப் போய் கக்கூஸ் சுத்தி செய்வதென்றால் காவி உடை அணிந்துள்ள உங்களை எவரும் அதைச் செய்யவிடமாட்டார்கள்" என்றார்.

சத்திய தேவ்ஜிக்கு விஷயம் புரிந்துவிட்ட போதிலும் பிடித்தம் ஏற்படவில்லை. என்னிடம் வந்து, "இது என்னால் ஆகாது. மன உறுதியுடன் ஏற்ற ஆடையை என்னால் விட முடியாது" என்றார்.

*காந்திக் காட்சிகள்: பக்கம் 180 : விலை 1—4—0.

★ காந்தியும் மார்க்ஸுமும் ★

அடிப்படையில் வேறுபட்ட இரண்டு கொள்கைகள்

ஆச்சாரிய விநோபா பாவே

(சென்ற இதழ் 112-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்று உலகத்தின் முன் எழும் பிரசினை ஆத்மீக சன்மார்க்க தர்மமா அல்லது ஜட சாஸ்திர மார்க்கமா என்பதே. இதன் பிரதிநிதிகள் காந்தியும் மார்க்ஸுமும், இவர்களது அடிப்படை கொள்கைகளை ஆராய்ச்சி செய்து சமாஜத்தின் போக்கையும் லக்ஷியத்தையும் நிர்ணயம் செய்யவேண்டும். விநோபாஜி இவைகளை அலசிப் பார்த்து எளிதில் புரிந்து கொள்ளும்படி விளக்குகிறார்.

சன்மார்க்க தர்மம்

ஆதியிலிருந்தே மனிதனின் நடவடிக்கைகளின் முடிவு, லட்சியம் முதலியவை சம்பந்தமாக அடிப்படையான தனித்த இரண்டு கொள்கைகள் அவனுடைய உள்ளத்தை ஆட்டுவித்துக்கொண்டு வந்திருக்கின்றன. ஒன்று, தனிமனிதனின் சற்குணத்தை விருத்திசெய்யவேண்டும் என்பது; சமுதாய முழுமைக்கும் ஏதுவான தொரு திட்டத்தை உருவாக்கவேண்டுமென்பது மற்றொன்று. முதல் கொள்கையை ஆதரிப்பவர்கள் கூறுவதென்ன? ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியும் வாழ்வும் தனிமனிதனின் நன்னடத்தை, சன்மார்க்கம், தன்னைத் தானே திருத்திக்கொள்வதிலுள்ள முயற்சி முதலியவற்றைப் பொறுத்திருக்கின்றன என்கிறார்கள். அவனவனுடைய சன்மார்க்க உணர்வுக் கேற்பவே அவனவன் வாழ்க்கையும் அமையும். இம் மனிதத் தன்மையின் அபிவிருத்தியை அனுசரித்தே சமுதாய அமைப்பும் மாறிக்கொண்டிருக்கும். ஆகவே, சமுதாயம் நன்மையுற வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சன்மார்க்க நீதிகளைப் போற்றி வளர்ப்பதில் அக்கறை செலுத்தவேண்டும். இதை மறந்து, மேல்வாரியாக சமுதாயத்தை நிர்மாணிக்கப்போகிறோம் என்று மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்வதில் பயனொன்றுமிராது. அது தலைக்கு மிஞ்சிய மமதைக்கு நம்மை இட்டுச்செல்லும். "ஜகத் வியாபார வர்ஜம்" (உலக சக்தியினைக் கட்டுப்படுத்துதல்) என்பது பிரபலமான ஒரு வேத சூத்திரம். ஒரு பக்தன் தான் எவ்வளவுதூரம் உயர்வடையலாம் என்ற அபிலாஷைக்கும் ஒரு அளவுண்டென்பதைச் சுட்டிக்காட்டுகிறது இச்சூத்திரம். ஆகவே, நாம் செய்யவேண்டியதெல்லாம் இதுவே—சத்தியம், அஹிம்சை, சுய கட்டுப்பாடு, திருப்தி, கூட்டுறவு முதலிய சன்மார்க்க, ஆத்மீக விதிகளின்பேரிலுள்ள நம்பிக்கையை மேன்மேலும் பலப்படுத்திக் கொண்டேயிருப்பதும், நமது அன்றாட வாழ்க்கையில் இவற்றை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர இடையறாது பாடுபடுவதுந்தான். இதை முதலில் செய்வோமாக; மற்றவை "தாமே வந்து சேரும்." குழந்தைக்குப் பாலூட்ட தாய்க்குச் சொல்லித்தர வேண்டுமா? கிள்ளினால் அழ வேண்டுமென்று குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? வேண்டியதில்லை. குழந்தைகளின் பேரில் அன்பு மாத்திரமிருந்தால் தாய் தானே அதற்குப் பாலூட்டுவாள். நோகுமளவிற்குக் கிள்ளினால் குழந்தை தானே அழத் தொடங்கி விடும்.

இக் கொள்கையானது தெய்வீக உணர்வுள்ள இதயங்களில் சுயமாகவே பரிணமிக்கிறது. கீதையில் ஞானத்தைக் குறிக்கும் அம்சங்கள், குணங்களின் நீண்டதொரு ஜாபிதா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கீதையின் உரையாசிரியரான ஞானதேவர் அழகான விளக்கவுரை கொடுத்திருக்கிறார்.

கம்யூனிச ஜட சாஸ்திரம்

கம்யூனிஸ்டுகளின் கொள்கையும் நோக்கமும் இதற்கு நேர் விரோத மானவை. அவர்கள் கூறுவதாவது:— சன்மார்க்க விருத்தி என்பதெல்லாம் ஒரு கற்பனைத் தத்துவமே. ஒரு வேளை அது மனதில் தோன்றும் ஒன்று என்று வைத்துக் கொண்டாலும், இங்கு மனம் என்பது என்ன?, இதை ஆராயுமிடத்து மனம் நம்மைச் சுற்றிய சூழ்நிலையைப் பொறுத்து உருவாகும் தன்மையது என்று தெரியவரும் லௌகிகச் சூழ்நிலையிலிருந்து உற்பத்தியாவதே மனம்; "பௌதிகம் சித்தம்"; (ஜடப் பொருள்களால் உருவானது மனம்). தாடியோடு கூடிய ஒரு மனிதனைக் கண்டு குழந்தை பயப்படுகிறது. காரணம், தாய்க்குத்

தாடியில்லையல்லவா! தாய்க்கும் மீசை, தாடி இருந்திருக்குமானால் ஒருவேளை குழந்தை வழுவழுப்பாக க்ஷவரம் செய்துகொண்டிருக்கும் மனிதனைக் கண்டு பயப்படலாம். கிள்ளினால் குழந்தை தானே அழத் தொடங்கிவிடுகிறது என்று உதாரணம் காண்பிக்கிறீர்கள். ஆனால் கிள்ளும்போது அதைத் தொடர்ந்து நோவும் இயற்கையாகவே உண்டாகிறதென்பதை அறியீரோ? மனம் என்பது நம்மைச் சுற்றியுள்ள ஜடப்பொருள்களின் உதவியின்றி சுயமாக இயங்குவதன்று. வெளியுலகத்தின் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சாயலே மனம். சாயலானது அதற்குக் காரணமான ஜடப்பொருளைக் கட்டுப்படுத்த முடியாது. அப்பொருளே தன் சாயலைக் கட்டுப்படுத்தும். அப்பொருளை மாற்றியமைத்தால் அதற்கேற்ப மனதில் தோன்றும் அதன் சாயலும் மாறும்; அதாவது, அங்கு உதிக்கும் குணமும் மாறுதலடையும். இரவில் நன்றாகத் தூங்கினால் காலையில் சுறுசுறுப்புடன் எழுந்திருக்க முடிகிறது. சுறுசுறுப்பென்பது சாத்விக குணத்திலிருந்து பிறப்பதாகும். இதுவே தெளிவான புத்திக்கும் ஞானத்திற்கும் வழிகோலுகிறது. அதேபோல், மனிதனுக்குப் பசியுண்டாகும்போது ரஜோ குணம் பிறக்கிறது. இக்குணம் மனிதனிடம் பரபரப்பையுண்டாக்குகிறது; மனத்தை தீவிரமாக வேலையிலீடுபடுத்துகிறது. வயிறு நிரம்பியதும் உண்ட மயக்கம், அதாவது, தமோ குணம் உச்சத்திற்கு வருகிறது. இவ்வாறு இம்மூன்று குணங்களுக்குமே முக்கியத்துவமளிப்பது அவசியம். நல்ல சூழ்நிலையை உண்டாக்குங்கள், அதைத் தொடர்ந்து நல்ல குணங்களும் தரமே உருவாகும். ஆகவே, நமது லௌகிகச் சூழ்நிலையை நம் கைவசமுள்ள எந்தவழியையும் மேற்கொண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மாற்றியமையுங்கள். வீண் கற்பனைத் தத்துவங்கள் புனைவதிலே காலத்தை விரயமாக்க வேண்டாம். மனிதனின் மனது எப்பொழுதும் போலவே இப்பொழுதுமிருக்கிறது. நீங்கள் என்னதான் செய்தாலும் அது இழிவான மிருக நிலைக்கு இறங்கிவிடப்போவதுமில்லை; நீங்கள் கற்பனை செய்யும் தெய்விக நிலைக்கு உயர்ந்துவிடப் போவதுமில்லை. அது வரையறுக்கப்பட்டதொரு குறிப்பிட்ட நிலைக்குள்ளே மாத்திரம் மாறிக்கொண்டிருக்கும். சூழ்நிலை விருத்தியடையுமானால் அதுவும் சிறிது அபிவிருத்தி காட்டும். சூழ்நிலை நலியுமானால் அதுவும் சிறிது தாழும். இதைப்பற்றிய வீண் கவலை வேண்டாம். சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டி, அவசியமானால் ஹிம்சையையும் கையாளுங்கள். 'ஐயோ, சன்மார்க்கம் ஒழிந்து போகுமே!' என்று அலட்டிக்கொள்ளவேண்டாம். அதனால் கெடுதலொன்றுமில்லை. உளுத்துப்போனதொரு சமுதாயத்தை அழிக்கத்தானே அதைக் கையாளுகிறோம்? ஒரு நல்ல முடிவைக் காணும்பொருட்டு கையாளப்படும் ஹிம்சை உண்மையான ஹிம்சையாகாது. அது ஒரு உயர்ந்த நோக்கத்தோடு கூடிய ஹிம்சையாகும். உண்மையில் அதுவும் ஒரு சன்மார்க்கமே. இதை உங்களால் புரிந்துகொள்ளமுடியுமானால் நீங்கள் அலட்டிக்கொண்டு அவதிப்படும் சன்மார்க்கத்தின் உண்மையான அபிவிருத்தி கூடவே பின்தொடரும்."

நிரந்தர சன்மார்க்க சமாஜத்தை அமைப்போம்

மேற்கண்டவைதான் இரண்டு மாறுபட்ட கொள்கைகள். மற்றவை தங்கள் தாரதம்மியத்திற்கேற்றவாறு இவ்விரண்டில் ஏதேனுமொன்றில் அடங்கும். சிலர் சொல்கிறார்கள்:— "சமுதாயத்தை மாற்றியமைக்கவேண்டுமென்பதன் அவசியத்தை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அம்மாறுதல் குறிப்பிட்ட சன்மார்க்கத்தின் அபிவிருத்தியின் சார்பாகவே அமையவேண்டும். எந்த நிலைமையிலும் நாம் கடைப்பிடித் தொழுகவேண்டிய சில சன்மார்க்க நியதிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பைக் காண வேண்டுமென்ற ஆத்திரத்தில் இந்த சன்மார்க்க நியதிகளை இழந்து விடுவோமானால் அது அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு முதலையே இழந்து விடுவதாகுமல்லவா! மேலும், வருங்காலமனைத்திற்கும் மனித வர்க்கத்தைத் தொல்லையினின்றும் விடுதலை செய்யவல்ல நிரந்தரமானதும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான ஒரு சமுதாயத்தையா அமைத்துவிடப் போகிறோம்? இல்லையே. காலம், இடம், இது போன்ற பல்வேறு சக்திகளின் தன்மைகளுக்கேற்ப சமுதாயம் மாறி மாறி அமைந்துகொண்டேதானிருக்கும். ஆகவே சமுதாய

(145-ம் பக்கம் பார்க்க)

மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு

சுசீலா நையார்

(1951 ஆகஸ்டு மாத இதழ் 368-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிரார்த்தனைக்கு பாபூ, நான் ஆகிய இருவருமே காலையில் எழுந்திருக்கிறோம். மஹாதேவ் பாய் எழ விரும்புகிறார். ஆனால் இரவில் தூக்கம் சரியாக வராமையால், 4-மணிக்கு அவரால் எழுந்திருக்கமுடிவதில்லை. இன்று காலையிலும் பாபுவும் நானுமே பிரார்த்தனை செய்தோம். பிரார்த்தனையை முடித்துக் கொண்டு நாங்கள் எங்கள் படுக்கைகளுக்குத் திரும்பியதும் மஹாதேவ் பாய் விழித்தெழுந்தார். பாபுவிடம் பிரார்த்தனையைப் பற்றிக் கேட்கலானார். பாபூ, "ஆம் இப்பொழுதுதான் முடிந்தது" என்றார். இன்று மஹாதேவ் பாயிக்கு பிரார்த்தனைக்கு வர மேண்டுமென்று எண்ணம். ஆனால் ½ மணி தாமதமாகிவிட்டதால் அவரால் வர முடியவில்லை. 6-மணிக்கு பாபூ எழுந்துவரவே மஹாதேவ் பாய் அவருக்கென்று பழ ரசம் தயாராக வைத்திருந்தார். பிறகு போய் 'டோஸ்ட்' சுட்டு, தேநீர் தயாரித்தார். ஸரோஜினி நாயுடு ஸ்நானம் செய்துவிட்டு வெளிவரவே மேஜைமீது தேநீர் முதலிய எல்லாம் சித்தமாயிருந்தது. டோஸ்டைத் துண்டாடி சுட்டு அழகாக வைத்துவிட்டுத் தாம் க்ஷவரம் செய்துகொண்டு அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் பாபூ என்னிடம், "உங்கள் இருவரில் யாருக்கு டோஸ்ட் நன்றாகத் தயாரிக்கத் தெரியும், உனக்கா, மஹாதேவுக்கா?" என்று கேட்டார் இன்று நான் மஹாதேவ் பாயிடம், "மஹாதேவ் பாய், அன்று பாபூ கேட்டபொழுது நீங்கள் என்னைக்காட்டிலும் நன்றாய் டோஸ்ட் தயாரிப்பீர்களென்று ஒத்துக் கொள்ள நான் சம்மதிக்கவில்லை. ஆனால் இன்றே உங்களிடம் என் தோல்வியை ஒப்புக்கொண்டாகவேண்டும். அரிந்து சுட்டு நீங்கள் இவைகளை இவ்வளவு அழகாக அடுக்கியும் வைத்துவிட்டீர்களே" என்றேன் மஹாதேவ் பாய்," எனக்கு நேரம் மட்டும் கிடைத்தால் நான் எதுவும் செய்யக்கூடும். ஆனால் ஒரு நாளைப்போல் எனக்குத் தூக்கம் நன்றாய் வருவதில்லை. காலையில் காலம் கடந்து எழுவதால் நேரமே இருப்பதில்லை. இன்று சீக்கிரம் எழுந்துவிட்டதால் இந்தக் காரியமெல்லாம் செய்ய முடிந்தது" என்றார்.

இதற்குள் ஸரோஜினி நாயுடு வந்தார். அவரும் மஹாதேவ் பாயைப் புகழலானார். மஹாதேவ் பாய் சிரிக்கத் தொடங்கினார். "ஆம். இப்பொழுது எனக்குச் சுலபமாக சமையல்காரன் உத்தியோகம் கிடைத்து விடும்" என்றார். மஹாதேவ் பாய் என் பக்கத்தில் உட்கார்ந்து சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார். அவருடைய தட்டில் ஒரு டோஸ்ட் இருந்ததை நான் பார்த்தேன். ஆனால் அவர் நடுவில் வைத்திருந்த தட்டிலிருந்து இன்னுமொரு துண்டை எடுத்துக் கொண்டார். பாபூ மஹாதேவ் பாயைக் கவியென்று சொல்வதுண்டு. பேச்சின் மும்முரத்தில் அவருக்குத் தம் தட்டில் டோஸ்ட் இருப்பதே நினைவில்லை போலுமென்று நான் எண்ணிக்கொண்டேன். ஆகையால் அதை நான் எடுத்துக்கொண்டேன். ஆனால் மஹாதேவ் பாய் தாம் சாப்பிடுவதற்காகவே அதை வைத்திருந்தார். நான் அதை திரும்ப வைக்கப் போகும்பொழுது அவர் தடுத்து, "வேண்டாம் நீயேதான் சாப்பிடேன்" என்றார். ஒவ்வொரு துளிக்கும் கடவுளிடம் கணக்குண்டு என்பது பிரசித்தம். மஹாதேவ் பாயின் கணக்கு முடிந்துவிட்டதால் அவர் தட்டிலிருந்த டோஸ்டும் என் கைக்கே வந்துவிட்டது.

மஹாதேவ் பாய் க்ஷவரம் செய்துகொண்டிருந்ததைக் குறிப்பிட்டு ஸரோஜினி நாயுடு, "இன்று நான் ஸ்நானம் செய்யப் போய்க் கொண்டிருக்கையில் மஹாதேவ் பெரிய கண்ணாடியின் எதிரில் உட்கார்ந்து க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். தம் மீசையைக் கத்தரித்துக்கொண்டும் நகங்களை வெட்டிக் கொண்டுமிருந்தார். நான் மனதிற்குள், அடே, இன்று மஹாதேவுக்கு என்ன வந்துவிட்டது? திடீரென்று தம்மை இவ்வாறு அழகுபடுத்திக்கொள்ள எப்படித் தோன்றியிருக்கிறது என்று சொல்லிக்கொண்டேன்" என்றார்- ஆனால் இயற்கையே இன்று அவரைப் பிரயாணத்திற்கு சித்தப்படுத்திக் கொண்டிருக்கிறது.

கர்லே ஸிங்கார் சதுர் அல்பேலி
ஸாஜன்கே கர் ஜானு ஹோகா.

(அறிவுள்ள பெண்ணே, அலங்காரம் செய்துகொள்; நாயகன் வீட்டிற்குப் போக வேண்டும்.)

நான் பாபுவுடன் உலாவக் கிளம்பிய பொழுது தோட்டத்தின் எதிர்மூலையிலிருந்து மஹாதேவ் பாய் வந்து, இந்த மரவேலி, "புதிதாகப் போடப்பட்டது என்பதற்கு இரண்டாவது ருசு ஒன்று இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இதோ பாருங்கள், மரச் சக்கைகள் குவிந்து கிடக்கின்றன. இப்பொழுது நான் அதைச் சரியாக உபயோகித்துக் கொள்வேன்" என்றார்.

உலாவி வருகையில் மஹாதேவ் பாய் வல்லபாயைப்பற்றிய செய்திகளை விவரிக்கலானார். வல்லபாயிக்கு நல்ல ஆடைகள் அணிவதில் மிகவும் ஆசையுண்டு என்றார். அவர் பாரிஸ்டர் தொழிலை நல்ல வருமானத்துடன் நடத்திவந்தார். மாதத்தில் 1.வாரம் 10 நாட்கள்தான் கோர்ட்டுக்குச் செல்வார். மற்ற நாட்களில் கிளப்பில் உட்கார்ந்து கொண்டு சீட்டு ஆடுவார். ஆயினும் மாதத்தில் 1000, 1500 ரூபாய் சம்பாதித்துவிடுவார். ஒரு சமயம் ஒரு நண்பருடன் அவர் சீட்டாடிக்கொண்டிருந்தார். நண்பர் கையில் சீட்டுக்கள் விரித்தபடியிருக்க அவர் தலை நாற்காலியின் பின்பக்கம் சாய்ந்துவிட்டது. சீட்டுக்கள் இருந்தபடியே இருக்க அவருடைய உயிர் நீங்கிவிட்டது. அதுமுதல் வல்லபாயிக்குச் சீட்டென்றால் பிடிப்பதே இல்லை. நாங்கள் எல்லோரும் கேட்டுகொண்டிருந்தோம். 2-மணிக்கெல்லாம் மஹாதேவ் பாயிக்கும் அதே முடிவு ஏற்படப்போகிறதென்று யாருக்குத் தெரியும்!

இன்று மஹாதேவ்பாய் குஷியாகத் தென்பட்டார். பாபூ தூக்கத்தைப்பற்றி விசாரிக்கவே அவர் மகிழ்ச்சியுடனே, "இன்றுதான் நன்றாய் உறங்கினேன். இதனால் சீக்கிரம் எழ முடிந்ததோடு எல்லாக்காரியங்களையும் செய்து முடித்துவிட்டேன். இன்று பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளலாமென்றிருந்தேன். ஆனால் சிறிது தாமதமாகிவிட்டது. பிரார்த்தனை முடியும் தருணத்தில்தான் எழுந்திருந்தேன்" என்றார். இவர் உற்சாகத்துடன் இருந்தார். நன்றாகப்பொழுது விடிந்திருக்கிறது என்பதைக்குறித்து மகிழ்ச்சி. பாபூ, "அது சரிதானே உன் தூக்கம். சரிப்பட்டுவிடுமானால் எல்லாம் சரியாகிவிடும்" என்றார். பிறகு பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டேயிருந்தார். இன்று மற்ற நாட்களைவிட அதிகமாகத் தோட்டத்தில் துப்புரவு நடந்துகொண்டிருந்தது. மஹாதேவ் பாய் "இன்று இன்ஸ்பெக்டர், ஜெனரலிடம் ஆரோக்கியம் சம்பந்தமான பத்திரிகைகள் கேளுங்கள்" என்றேன். அவர், நீயே ஏன் கேட்கக்கூடாது என்றார். நான், "அந்தசமயத்தில் மாலீஷ் செய்துகொண்டிருப்பேனாகையால் உங்களிடம் சொல்லுகிறேன்" என்றேன். பேச்சினிடையில் நான், "மஹாதேவ்பாய், ஒரு வகையில் இந்தச் சிறை நல்லதே. பாபுவும் மிகவும் களைத்திருந்தார். நீங்களும் சோர்ந்து போயிருந்தீர்கள். இங்கே கட்டாய ஓய்வு கிடைத்துக்கொண்டிருக்கிறது. வெளியேறுவதற்குள் நீங்களும், பாபுவும் வெளிவேலைக்கு வேண்டிய பலம் பெற்றுவிடுவீர்கள்" என்றேன். இதற்கு அவர் ஆழ்ந்த சிந்தனையுடன் என்னை உற்று நோக்கிக்கொண்டே "அது என்னவோ எனக்குத்தெரியாது" என்றார். உலாவிய பின் நாங்கள் மாடிக்குச் சென்றோம். நான் மாலீஷ் செய்வதற்காக பாபுவின் அருகில் போய்விட்டேன். இதற்குள் கீழே கேட்ட சத்தத்திலிருந்து இன்ஸ்பெக்டர் ஜெனரல் வந்துவிட்டார் என்று தெரிந்தது. நான் என்னவோ எடுப்பதற்காக அறைக்குப் போனேன். மஹாதேவ் பாய் ஸரோஜினி நாயுடுவின் ஸ்நான அறையிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தார். பக்கத்தில் The Art of Living வாழ்க்கைக் கலை என்ற புத்தகம் இருந்தது. ஆனால் அவர் மௌனமாகப் போய்விட்டார். இது வழக்கத்திற்கு மாறாயிருந்தது. எப்பொழுதும் அவர் எங்கு சந்தித்தாலும் ஏதாவது சொல்லிவிட்டுத்தான் போவார். மேலும் இங்கே என் அண்ணன் இல்லையாகையால் அந்தக் குறைபாட்டை இயன்ற அளவு தாம் நீக்கவேண்டுமென்பதும் அவருடைய எண்ணம். சாப்பிடும் சமயத்திலும் அவர் எப்பொழுதும் எனக்காகக் காத்திருப்பார்.

நான் வருவதற்கு முன் பாபுவின் உணவருந்தும் கலங்களையும் ஆடைகளையும்

கைதிகள் சுத்தம் செய்து துவைத்து வந்தார்கள். மஹாதேவ்பாய் தம் துணிகளை சில சமயம் தாமே துவைப்பார்; சிலசமயம் வெளுக்கப் போடுவார். மீராபஹன் அநேகமாகத் தம் ஆடைகளைத் தாமே துவைத்துக் கொள்வார். மீராபஹன் "பாபுவின் காரியங்களைச் செய்வதனால் கைதிகளுக்குத் திருப்தியேற்பட்டு வருகிறதென்றால் அவர்களை செய்யவிட வேண்டியதே" என்றார். கைதிகளையும் ஜவான்களையும் தம் வேலைகளை செய்யச் செய்வது பாபுவுக்கு அவ்வளவு பிடிக்கவில்லையென்று நான் அவருடைய பேச்சிலிருந்து அறிந்தேன். "அவர்கள் நம்மை தம் தலைவர்களென்று எண்ண வேண்டுமென்று நான் விரும்பவில்லை. நாமும் அவர்களைப் போன்று கைதிகளே. என் வேலைகளை நானே செய்துகொள்வதோ, என் தோழர்களைக்கொண்டு செய்விப்பதோ தான் பிடிக்கிறது" என்றார். ஆகையால் பாபுவின் பாத்திரங்களை நானே துலக்கத் துடங்கினேன். என் ஆடைகளை நானேதான் துவைப்பது. இப்பொழுது பாபுவின் ஆடைகளையும் துவைக்கலானேன். பாபூ ஸ்நானம் செய்து வெளியேறியதும் நான் துணிகளைத் துவைத்து விட்டு ஸ்நானம் செய்வேன். மஹாதேவ் பாய் பாபுவுக்கு உணவு கொணர்ந்து கொடுத்துவிட்டு எனக்காகக் காத்திருப்பார்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

* * *

காந்தியும் மார்க்ஸும்

(142-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று அவசரப் பட்டு அலட்டிக் கொள்வது சரியல்ல. மேலும், மக்களால் ஆனதுதானே சமுதாயம்? அப்படியானால் மக்கள் எவ்வாறோ அவ்வாறே சமுதாயமும் அமையும். ஆகவே நாம் மேற்கொள்ளும் சமுதாயச் சீர்திருத்த வேலைத் திட்டங்கள் மக்களின் சன்மார்க்கம், ஒழுக்கம், பண்பு முதலியவற்றைப் பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்பதற் கேதுவாகவும் வகுக்கப்பட வேண்டும். திட்டங்களைச் செயலுக்குக் கொண்டு வரும் வழி முறைகள் அந்த சன் மார்க்கம், ஒழுக்கம், பண்பு முதலியவற்றை உறுதிப் படுத்துவதாகவு மிருக்க வேண்டும். இதனால் நாம் விரும்புகிற சீர்திருத்தத்தை மெதுவாகவும் படிப்படியாகவுமே அடைய முடியும் என்று தோன்றினாலும் பரவாயில்லை. நன்றாக மென்று உட்கொள்ளும் உணவுதான் நன்றாகவும் விரைவாகவும் ஜீரணமாகும். மெதுவாகவும் படிப்படியாகவும் செல்லுதல் போல் தோன்றினாலும் இறுதியில் நாம் துரிதமாகச் சென்றிருக்கிறோ மென்பதை நமது செயல் நிரூபிக்கும்.

"சன்மார்க்கம், ஒழுக்கம் என்று குறிப்பிடும் போது, நாங்கள் மனிதனைத் தெய்வாம்சமாக மாற்றப் புறப்பட்டு விட்டோம் போலும் என்று எண்ண வேண்டாம். அந்தப் பெருமை எமக்குத் தேவையில்லை. நாம் எப்பொழுதும் மனிதர்களே. நாம் எவ்வளவு தான் நல்லவர்களாயிருந்த போதிலும் தெய்வாம்சங்களாகிவிடுவோமோ என்ற பயம் வேண்டாம்! அந்த எண்ணத்தை விட்டு, நம்மால் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு தூரம் சன்மார்க்கத்தை அபிவிருத்தி செய்ய முயலுவோமாக. நல்லதொரு, சமுதாய அமைப்பு சன்மார்க்க அபிவிருத்திக்கு உதவி செய்யும் என்பது உண்மையே. அதேபோல், சன்மார்க்க அபிவிருத்தியினுதவியால் ஒரு நல்ல சமுதாயத்தை அமைக்க இயலும் என்பது அதைவிடத் தெளிவான உண்மையாகும். ஆகவே சமுதாயத்தைக் கட்டியமைப்பதற்கு சன்மார்க்க மென்னும் அடிப்படை வேண்டும் என்ற உண்மையில் அசையாத நம்பிக்கை முதலில் நமக்கு வேண்டும். அடிப்படையையே குலைத்து விட்டு கட்டிடத்தைப் பலப்படுத்துவேன் என்றால் அதை நம்ப முடியுமா?"

★ ★ ★

காந்திய - ஸர்வோதயம் சம்பந்தமான தமிழ், ஆங்கிலம், ஹிந்தி
இலக்கியங்களுக்கெல்லாம்
★ A. I. S. A. ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி, திருப்பூர். ★

★ வர்தா ★

சத்தியன்

காந்தீய நிர்மாண ஸ்தாபனங்களுக்கெல்லாம் வர்தா தலைநகரமாக விளங்குகிறது என்பது மிகையல்ல. அங்கு உள்ள ஸ்தாபனங்களைப்பற்றி ஸ்ரீ சத்தியன் எழுதிய ஹிந்தி புத்தகத்திலிருந்து மொழிபெயர்ப்பு இது. இதன் முன் பாகம் "கதர் மலர்" ஜனவரி மாத இதழில் வெளிவந்தது.

ராஷ்ட்ர பாஷா பிரசார சமிதி:- இந்த ஸ்தாபனம் வர்தா ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஹிந்தி பிரசாரத்திற்காக, ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்தின் ஆதரவில் இது நடைபெறுகிறது. ஹிந்தி போதனை, பரீட்சை முதலியன இந்த ஸ்தாபனத்தின் மூலம் நடைபெறுகின்றன. பதந்த் ஆனந்த கௌசல்யாயன் இதனுடைய தலைமைக் காரியதரிசி. பம்பாய், குஜராத், மஹாராஷ்டிரம், சிந்து, வங்காளம், ஒரிஸா, அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் ஹிந்தி பிரசார வேலையை இந்த சபை தான் செய்து கொண்டிருக்கிறது. "ராஷ்டிர பாஷா" என்ற பெயருடைய மாதப் பத்திரிகையும் இந்த ஸ்தாபனத்தின் மூலமாகப் பிரசுரமாகிறது.

ஹிந்துஸ்தானி பிரசார சபா:- ராஷ்டிர பாஷா ஹிந்துஸ்தானி பிரசாரத்திற்காக மகாத்மா காந்தி 1945-ல் இதை ஸ்தாபனம் செய்தார். இங்குதான் ஹிந்துஸ்தானி பிரசாரகர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இங்கு ஹிந்தி, உருது ஆகிய இரண்டு பாஷைகளும் ஹிந்தி, உருது ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் கற்பிக்கப்படுகின்றன. இதன் முக்கியப் பொறுப்பு காகா கலேல்கரிடம் இருக்கிறது. இதனுடைய காரியதரிசி அமிர்தலால் நாணவதி என்பவரும் இங்குதான் இருக்கிறார். இந்த ஸ்தாபனம் அமைந்திருக்கும் இடத்திற்கு காகாவாடி என்று பெயர். சேவாகிராமம் போகும் ரஸ்தாவில் மகிளாஸ்ரமத்திற்கும் கோபுரிக்கும் மத்தியில் இந்த இடம் இருக்கிறது.

மகிளாஸ்ரமம்:- இந்த ஸ்தாபனம் மகிளா சேவா மண்டலின் மூலமாக நிர்வகிக்கப்படுகிறது. ஆரம்பத்தில், மகன்வாடி ஸ்தாபிதம் ஆவதற்கு முன்பு காந்திஜி இவ்விடத்தில் வசித்து வந்தார். ஸ்திரீ சமூகத்தின் முன்னேற்றம், கல்வி முதலிய வேலைகள் நடைபெறுகின்றன. இதில் விதவைகள், சுமங்கிலிகள், கன்னிகைகள் அனைவரும் கல்வி கற்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலிருந்தும் பெண்கள் இங்கு வந்து படிக்கிறார்கள். பாடத்திட்டம் தனியானது; சர்க்கார், அல்லது சர்வகலா சாலை மூலமாக இது அங்கீகாரம் பெறவில்லை. பெண்களின் ஆதாரப் பாடசாலையும் "பால மந்திரமும்" (குழந்தைகளின் கல்வி நிலையம்) இங்கு நடைபெறுகிறது. நூற்பு, நெசவு, தையல், பசுப் பாதுகாப்பு, விவசாயம், செருப்புத் தைத்தல் முதலிய வாழ்க்கைக்கு உபயோகமான வேலைகளில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஹிந்தி மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியாகும் "மகிளா ஆஸ்ரமம் பத்ரிகா" என்ற பத்திரிகையும் இங்கிருந்து வெளியாகிறது.

கோபுரி:- இது நால்வாடி கிராமத்திற்குப் பக்கத்தில், வர்தாவிலிருந்து ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்தில் அமைந்துள்ள முற்றிலும் புதியதொரு கிராமம். இங்கு நடைபெறக்கூடிய எல்லா வேலைகளும் வினோபாஜியின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெறுகின்றன. இங்கு முக்கியமாகராட்டைத் தொழிற்சாலை, பசுப் பாதுகாப்பு ஆராய்ச்சி, தோல் பதனிடும் தொழிற்சாலை, கதர் உற்பத்தி, நூற்பு, நெசவு, முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. இந்த எல்லா வேலைகளும் கிராம சேவா மண்டலின் மூலமாகவே நடைபெறுகின்றன. வர்தா ஜில்லாவிலுள்ள நிர்மாண வேலைகளுக்காக கிராம சேவா மண்டல் ஸ்தாபிக்கப்பட்டது. வினோபாஜியின் பிரிய சிஷ்யர்களான ஸ்ரீ வல்லபஸ்வாமி, பகவான்ஜி ஆகிய இருவரும் இதன் தலைவர்களாவர். ஸ்ரீமதி அநுசூயா பஜாஜ் இதன் காரியதரிசி. ஸ்ரீ கோபால்ராவ் காளே, பாபாஜி மோதே, தத்தோபா தாஸ்தானே, புருஷோத்தம பாவு பான்ஸே, ராதாகிருஷ்ண பஜாஜ் முதலியவர்கள் இதன் முக்கிய தொண்டர்கள். இங்கு தோல் பதனிடு சாலையில் தானாக இறந்த மிருகங்களின் தோல்தான் பதனிடப்படுகிறது. அதன் பெயர் "கோ சேவா தோல் பதனிடு சாலை" என்பதாகும். தோல்பதனிடு சாலையின் வேலை காந்திஜியின் கொள்கைப் பிரகாரம் நடைபெறுகிறது. ஸ்ரீ கோபால் ராவ் பாலுஞ்சர் என்பவர் இதன் முக்கிய

தொண்டராவார். இவர் தோல் பதனிடும் சாலையை முன்னுக்குக் கொண்டுவந்தார். வர்தாவில் நடைபெறும் காதி விற்பனை வஸ்திராலயமும் கிராம சேவா மண்டலின் மூலமாக நடைபெறுகிறது. அகில பாரத கோ-சேவா சங்கத்தின் தலைமைக் காரியாலயமும் கோபுரியில் இருக்கிறது. ஸ்ரீ ராதாகிருஷ்ண பஜாஜ் இதனுடைய காரியதரிசி. சர்க்கார் ஆதரவில் இங்கு பசு வளர்ப்பு சம்பந்தமான வித்தியாலயம் ஒன்று நடைபெறுகிறது. கோ-சேவா சங்கத்தின் புத்தகங்கள் கோபுரியில் பிரசுரிக்கப் படுகின்றன. வினோபாஜி, காந்திஜி முதலியவர்களின் கருத்துங்களடங்கிய சில மகத்துவமான புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு கிராம சேவா மண்டலின் பிரசுர இலாகா தனியாக நடைபெறுகிறது. இதனுடைய காரியாலயமும் கோபுரியில் தான் இருக்கிறது. "ஸேவக்" என்ற பெயருடைய மராட்டி மாதப் பத்திரிகையும் இங்கிருந்து பிரசுரிக்கப் படுகிறது. ஸ்ரீ குந்தர் திவான் இதனுடைய முக்கிய தொண்டராவார். வர்தாவினுள்ள மகத்துவமான ஸ்தாபனங்களில் கோபுரியும் ஒன்ருக எண்ணப்படுகிறது. வினோபாஜியால் பயிற்றுவிக்கப்பட்ட அநேக அரிய தொண்டர்கள் இங்கு வசிக்கிறுர்கள். ஸ்ரீ ஜம்னுலால் பஜாஜ் தன்னுடைய வாழ்க்கையின் கடைசி நாட்களை கோசேவையில் இங்கு தான் கழித்தார். கோபுரியிலுள்ள "சாந்தி குடீர்" என்பது அவரின் வாசஸ்தலம். சர்வ சேவா சமிதியின் தலைமைக் காரியாலயம் இங்கிருக்கிறது. இது இங்கு நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள எல்லா ஸ்தாபனங்களின் கூட்டுக் கமிட்டியாகும். இந்தக் கமிட்டிக்கு எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி வீதம் அனுப்பப்படுகிறுர்கள். ஒவ்வொரு வாரமும் இதன் கூட்டம் நடைபெறுகிறது. ஸ்ரீ சதாசிவ ராவ் கத்தே என்பவர் இதனுடைய காரியதரிசி.

நால்வாடி:- 1933 வருடத்திலிருந்து 1939 வருடம் வரையில் வினோபாஜி, அவருடைய சிஷ்யர்கள், சக தொண்டர்கள் முதலியோர் இங்குதான் வசித்து வந்தார்கள். அந்தச் சமயம் இங்கும் சத்தியாக்கிரக ஆசிரமம் இருந்தது. நால்வாடி ஒரு கிராமம், அங்கு வசிப்பவர்கள் அனைவரும் ஹரிஜனங்கள். ஹரிஜன சேவைக்காகவே முதலில் வினோபாஜி இங்கு வந்திருந்தார். நால்வாடியில் நடக்கும் வேலை, வினோபாஜியின் ஆசிரமம் முதலியவைகளைப் பற்றி 1935-ல் மீராபஹன் "ஹரிஜனி"ல் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 1942-ம் வருஷ இயக்கத்தில் சர்க்கார் இந்த ஸ்தாபனத்தை ஜப்தி செய்து விட்டார்கள். அதிகமான கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. இப்பொழுது இங்கு நெசவு வேலை, நெசவு கற்பிக்கும் வகுப்பு, கிராம சேவை, ஆதாரப் பாடசாலை முதலிய வேலைகள் நடைபெறுகின்றன. இந்த கிராமம் வர்தாவிலிருந்து 2¼ மைல் தூரத்தில், வர்தா-நாகபுரி ரஸ்தாவில் இருக்கிறது. கிராமத்தின் ஜனசங்கியை 900 ஆகும்.

தத்தபுர்:- நால்வாடிக்கு அடுத்தபடியாக தத்தபுர் இருக்கிறது. இது வர்தா ஸ்டேஷனிலிருந்து 3½ மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு குஷ்டரோக வைத்தியசாலையும், விடுதியும் இருக்கிறது. அதிகமான ஆண் பெண்கள் வைத்தியத்திற்காக வருகிறுர்கள். இப்பொழுது குஷ்டரோக விடுதியில் 55 ஆண்களும் 39 பெண்களும் இருக்கிறுர்கள். இதற்கு "மகா ரோகி ஸேவா மண்டல்" என்ற பெயருடைய ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. வர்தாவில் வேறு இரண்டு மூன்று இடங்களில் ஸ்ரீ மனோகர் திவான் குஷ்டரோக வைத்தியம் நடத்துகிறுர். இது சுதத்மான சேவை மனப்பான்மையுடன் நடைபெறுகிறது. ஒவ்வொரு நோயிலிருந்தும் இந்திய மக்களைக் காப்பாற்றுவது மகாத்மாஜியின் லட்சியமாக இருந்தது. ஆகையால் தான் குஷ்டரோக வேலையும் நிர்மாண வேலைத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறது.

பௌனுர்:- இது வர்தாவிலிருந்து சரியாக 6 மைல் தூரத்தில், வர்தா—நாகபுரி ரஸ்தாவில், தத்தபுருக்கு அப்பால் இருக்கிறது. நதிக் கரையில் உயரமான இடத்தில் வினோபாஜியின் ஆசிரமம் இருக்கிறது. ஆசிரமத்தின் பெயர் பரந்தாம். வினோபாஜியும் அவருடைய சிஷ்யர்களும் இங்கே இருக்கிறுர்கள். ஆசிரமத்தில் வினோபாஜியின் மூலமாக நூற்பு நெசவு முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. பௌனுர் ஆசிரமத்தின் முறை, காந்திஜியின் சேவாகிராம ஆசிரமத்தைப் போன்றிருக்கிறது. காந்திஜியின் அஸ்தி பௌனுர் நதியில் இங்கு கரைக்கப்பட்டது.

★ ★ ★

காந்திஜியின் முதல் தரிசனம்

ஸ்ரீமந்நாராயண் அகர்வால்

[காந்திஜியுடன் நெருங்கிப் பழகியவர்களில் 54 பெரியார்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'Incidents of Gandhiji's Life' (காந்திஜியின் வாழ்க்கை சம்பவங்கள்) என்ற ஆங்கிலப் புத்தகத்தை சிறிதுகாலம் காந்திஜியின் காரியதரிசியாக இருந்தஸ்ரீ சந்திர சங்கர் சுக்லா என்பவர் வெளியிட்டுள்ளார். இதிலிருந்து கதர் மலருக்காக ஒரு காந்தி பக்தர் மொழிபெயர்த்து அனுப்பியது கீழே காண்பது. ஆங்கில புத்தகம்: விலை 10—8—0 ஸர்வோதய பிரசுராலயத்தில் கிடைக்கும்.]

கக்கூஸ் வேலை

முதல் சந்திப்பு: வர்தா-மகன்வாடியில்; 1936-ம் ஆண்டு எப்ரல் மாதம்; என்ன எதிர்பார்த்தேனே அவ்வாறு இல்லை. ஏமாற்றமடைந்தேன். மனதினுள்ளே படர்ந்திருந்த மாயத் திரை விலகியது. என்னையொத்த தோழர்கள், மாயை மூடியவர்கள் இருக்கலாம். மகாத்மா என்றால் கடுஞ்சிந்தனை தேங்கிய தீவிர திருஷ்டியும் வறண்ட மௌனமும் நிலவும் என்று எண்ணினேன். நான் கண்டது என்ன? விந்தையிலும் விந்தை! பொறிவாணம் உதிர்வதுபோல, 'பொலபொல' வென்று வேடிக்கைப் பேச்சுகள்! உற்சாகமூட்டும் ஹாஸ்யத் துணுக்குகள்! ஒரு சில நிமிஷங்களில், மனிதப் பண்பு மலர்ந்து நிற்பவர் மகாத்மா என்று கண்டு கொண்டேன். அதுமட்டுமல்ல; ஹாஸ்யமும் வேடிக்கையும் அறிவுக்கு விருந்தாகும் ஒளியுறும் மணிப்பேச்சுகளும் வற்றாத ஊற்றாகப் பெருக்கெடுத்து ஓடின.

"எனக்காக நீர் என்ன காரியம் செய்ய விரும்புகிறீர், இங்கே?" என்றார் காந்திஜி.

"உங்களுக்குத் தொண்டன் நான், பாபுஜி. ஆணையிடுங்கள், காத்திருக்கிறேன்" என்றேன்.

"இங்கிலாந்திலிருந்து சமீபத்தில்தான் வந்திருக்கிறீர்; எனக்குத் தெரியும். இலக்கியத் தொண்டு செய்ய முடியும், உம்மால். ஆனால் நான் அவ்வேலை தர முடியாது. சர்க்காவின் விஞ்ஞானம் உமக்குத் தெரியுமா? இதோ எனது சர்க்கா. வேலைக்கு உதவாத நிலையில் உள்ளது. அதைச் சீர்படுத்துவீரா?"

"சர்க்காவைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாதே. முதலில் அதன் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டாகவேண்டுமே, நான்!"

"அப்படியானால் உம் கல்வி முழுதுமே வீண் அல்லவா? ஹிந்துஸ்தானியில் கூறுவார்களே 'மணலை வடிகட்டுவதென்று!', அதுபோல்தானே" என்று உள்ளங் கலந்த சிரிப்புடன் காந்திஜி கூறினார்.

புன்னகையுடன், "நான் ஒப்புக் கொள்கிறேன்" என்றேன்.

"நல்லது. ஆனால் அத்தகைய வேலையைத்தான் உமக்கு இதோ தருகிறேன். இங்குள்ள கக்கூஸ் குழிகளுக்கு நல்ல மண் வேண்டியிருக்கிறது. ஸ்ரீ எம். எஸ்., அவ்வேலையில் ஈடுபட்டுள்ளார். நீரும் உதவி செய்கிறீரா?"

"மட்டற்ற மகிழ்ச்சி, இதோ வேலையைச் செய்கிறேன். தோட்ட வேலை ஏராளமாகச் செய்தவன் நான். எனவே, இவ்வேலை எனக்குப் புதியதுமல்ல."

"பேஷ்," என்றார், நகை முகத்துடன் காந்திஜி. பிரதி ஞாயிறும் நான் அவ்வேலையைச் செய்துவந்தேன். சில மாதங்களுக்கு இவ்வேலைதான் எனக்கு.

"நான் மந்திரியாக வேண்டுமா?"

அடுத்த நிகழ்ச்சி: 1937-ம் ஆண்டு மார்ச் மாதம் என்று நினைக்கிறேன். அகில இந்திய ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனம் சென்னையில் நடக்கவிருக்கிறது. ஸேத் ஜம்னலால்ஜி அதன் தலைவர். காந்திஜியும் கலந்துகொள்வதற்காகப் புறப்பட்டார். ஸ்டேஷன் தோறும் கூட்டம் நிலை கொள்ளவில்லை. பொது மக்கள் அனைவரும், 'காங்கிரஸ் பதவியேற்குமா, ஏற்காதா' வென்ற பிரசினையில் அடங்காத ஆவலும் சிரத்தையும் காண்பித்த காலம் அது. மக்களின் மனதை வெகுவாக அலட்டிக் கொண்டிருந்தது அந்தப் பிரசினை. விஜயவாடா ஸ்டேஷனுக்குள் நாங்கள் சென்று கொண்டிருந்த 'கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ்' நுழைந்தது. மகாத்மாவின்

தரிசனத்திற்காக 'ஜே ஜே' என்று கூட்டம் ஒரு பத்திரிகை நிருபர் நழுவி நழுவி, 'பூப் போல்' மகாத்மாவின் சமீபம் வந்து விட்டார். வியர்க்க, விறு விறுக்க, வந்ததும் வராதது மாய் "பாபூஜி, காங்கிரஸ் பதவி ஏற்குமா?" என்று ஆவலுடன் கேட்டார். அவ்வளவு எளிதில் பதில் கொடுப்பாரா? என்ன வார்த்தை வந்தாலும் சரி, மகாத்மாவின் வாக்கு, அந்த முக்கியமான தருணத்தில் பிர மாதமாக அடிபடும். அதற்கு விரிவுரைகள் வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் எழும். இதையெல்லாம் அவர் அறியாதவரா? அவர் மௌனமாக இருந்தாலுங் கூட, அதற்கும் ஒரு அர்த்தம் கற்பித்துக் கொட்டை யெழுத்தில் பிரசுரித்து விடுவார்கள் பத்திரி கைக்காரர்கள். எனவே, தட்டிக்கழிப்பதில் தந்திரசாலியான மகாத்மா "ஏன், நான் மந்திரியாக வேண்டுமென்பது உங்கள் ஆசை யா?" என்றார். கேள்வி திடீரென்று பிறந்தது; அது மட்டுமல்ல, நிருபர் எதிர் பார்த்தே யிருக்க முடியாதது. அவர் ஏன் பேசுகிறார்? காந்திஜி நாக்கைச் 'சப்பு'க் கொட்டிக்கொண்டு கேட்ட மறுகணம், அவரது முகத்தில் அரும்பிய புன்னகை மறையுமுன், வந்த வழியைப் பார்த்துக் கொண்டு வெகுவேகமாய் மறைந்து விட்டார் நிருபர், பாவம்! கூட்டம் முழுதும் கல கல வென்று நகைத்தது.

என் வாழ்க்கையே சோதனை தான்

மற்றோர் நிகழ்ச்சி: என் அதிர்ஷ்டந்தான். மகாத்மா என் குடிசையில் 1944–1945-ல் இரண்டு தடவைகள் தங்கினர். 1944-ல் டிசம்பரில் இருந்தார். இரவில் படுக்கைக்கு மூன்று தலையணைகள் வைத்துக் கொண்டார். 1945-ல் பிப்ரவரியில் வந்து தங்கினர். தலையணைகளே வைத்துக் கொள்ளவில்லை.

சற்று தயக்கத்துடனேயே கேட்டேன், "பாபூஜி, இப்பொழுது தலையணைகளை ஏன் ஒதுக்கி விட்டீர்கள்?"

காந்திஜி:- "ஆஸனங்களில் சவாஸனம் என்பது தூக்கத்திற்கு மிகச் சிறந்த உதவி யளிக்கும் என்று படித்தேன். கொஞ்ச நாட்களுக்கு முன். அதைச் சோதனை செய்து பார்க்கிறேன்."

நான்:– "பாபுஜி, சோதனைகள் நிறைந்தது தங்கள் வாழ்க்கை. வயதான பிறகாவது பிறரைக் கொண்டு சோதனைகள் நடத்த லாகாதா? உங்கள் உடல் மெலிந்து நைந்தது; விலைமதிக்க முடியாதது உங்கள் உயிர். அந்த நிலையில் சோதனைகளை நிறுத்தலாகாதா?"

"நன்று, நன்று, முடியவே முடியாது. என் வாழ்க்கையே ஒரு சோதனைதானே! என் மரணத்தோடுதான் என் சோதனைகளும் முடிவு காணும்!" என்றார் மோகனப் புன்னகையுடன்.

'வேடிக்கை மட்டுமல்ல, மகா பாவச் செயல்'

சமீப நிகழ்ச்சி: வங்காளத்துக்குப் புறப்பட்டார். மூன்றும் வகுப்பு 'கம்பார்ட் மெண்டு'கள் இரண்டு முழுசாக ஒழித்து விடப்பட்டிருந்தன, காந்திஜி கோஷ்டிக் கென்று. காந்திஜிக்கு இரண்டு அறைகள் அவசியமில்லை யென்று பட்டது. ஒரு அறையில் தாமும் தம் சகாக்களும் சௌகரிய மாகப் போக முடியும் என்று தெரிந்தது. கூப்பிட்டார் கனுகாந்தியை; "அறையைக் காலி செய்து விடவேண்டும்", என்றார். "பாபூஜி, நமக்காக இரண்டும் 'ரிஸர்வ்' செய்யப்பட்டுள்ளன. ரயில்வேக்காரர் களுக்குப் பணம் பூராவும் சேர்ந்து விட்டதே" என்றார் கனு காந்தி.

"அதைப் பற்றிக் கவலையே யில்லை. வங்காளத்துக்கு எதற்காகப் போகிறோம்? ஏழைமக்கள் பல்லாயிரக்கணக்கில் பட்டினி யால் வாடுகிறார்கள், அவர்களுக்கு உதவி செய்ய நாம் போகிறோம். ரயில் வண்டியில் சுகங்களை யனுபவிப்பது பொருத்தமா? தவிர, இதர அறைகளில் ஜனங்கள் எவ்வாறு மூச்சுத் திணறுகிறார்கள்? தெரிய வில்லையா, உனக்கு? இத்தருணத்தில் 'தீராது, இவ்வளவு இடமாவது இருக்கத்தான் வேண்டும்' என்ற அளவுக்கு மீறி ஒரு துளி கூட அதிக இடம் நாம் வியாபிக்கக் கூடாது. இந்த நாட்களில் இவ்வளவு காலியிடம் நமக்காக ஒதுக்கி விடச் செய்து, மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்தோம் என்று ஜம்பமாகப் பேசுவதும் பிரயாணம் செய்வதும் வேடிக்கை மட்டு மல்ல, கேலிக் கூத்தல்ல, மகாபாவச் செயல், ஆம், மிக மிக அக்கிரமம்."

இதற்கு மேலும், வாதங்கள் தேவையா? ஒரு அறை முழுதும் உடனே மற்ற பிரயாணி களுக்கு என்று காலியாகி விட்டது.

ஆச்சரியமென்ன வெனில், அதன் பிறகு தான் காந்திஜி நீட்டி நிமிர்ந்து படுத்து உறங்க ஆரம்பித்தார்.

★ ★ ஜப்பானின் அதிசயமான முன்னேற்றம் ★ ★

A. S. சஹஸ்ரபுத்தே

[யுத்தத்தில் சீர்குலைந்துபோன ஜப்பான் வெகு வேகமாக, உணவில் சுயதேவைப் பூர்த்தி அடைந்துவருகிறது. இதற்கு ஜனங்கள் உழைப்புடன் மலமூத்திர உரத்தை உபயோகிக்கும் முறை காரணம். விவசாயத்தில் அவர்களுடைய விஞ்ஞான அறிவுடன் இயற்கை உரத்தைக் கொண்டு, நம் தேசத்தைவிட ஜப்பானில் ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் நான்கு மடங்கு தானியம் உற்பத்தி செய்கிறார்கள். மல மூத்திர உரத்திற்கு உள்ள விசேஷ மதிப்பினால் எல்லோரும் அதை எடுத்து உபயோகிப்பதால் தோட்டி என்ற தனி ஜாதிக்கு அவசியம் இல்லை.

இந்த கட்டுரையை எழுதியவர் மகாராஷ்டிர சர்க்கா சங்கக் கிளையின் மாஜி காரியதரிசி. அதற்குப்பின் பம்பாய் சர்க்காரின் குடிசைத்தொழில் போர்டின் கௌரவ அதிகாரி. சர்க்கா சங்கக் காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தியின் 5 வருஷ பதவிக்காலம் பூர்த்தியாகிவிட்டபடியால் அவர் ராஜீநாமா செய்துவிட்டார். இப்பொழுது ஸ்ரீ சஹஸ்ரபுத்தே சங்கத்தின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சமீபத்தில் ஜப்பான் சென்று நேரில் பார்த்ததை ஹிந்தி ஸர்வோதயத்தில் (நவம்பர் '51) எழுதியுள்ளார். அதன் மொழிபெயர்ப்பு இக்கட்டுரை.]

இருபது சத உணவு பற்றுக்குறைவு:-

ஜப்பானின் ஜனத்தொகை சுமார் ஒன்பது கோடியாகும். யுத்தத்திற்கு முன்பு அநேக அந்நிய தேசங்களும், பிராந்தியங்களும் ஜப்பானியர் வசம் இருந்தது. அப்பொழுது ஜப்பானின் ஜனத்தொகையில் ஏறக்குறைய இருபது சத விகிதத்தினர் ஜப்பானிற்கு வெளியே வசித்து வந்தார்கள். யுத்தத்தில் தோற்றதின் காரணமாக வெளியே வசித்தவர்கள் அனைவரும் ஜப்பானுக்கு திரும்பி வர நேர்ந்தது. இன்று ஐந்து மனிதர்களுக்கு ஒருவர் விகிதம் இம்மாதிரி வெளியில் இருந்து வந்தவர்கள் அகதிகளைப்போன்று இருக்கிறார்கள். 1945-ல் யுத்தத்தில் தோற்ற பிறகு ஜப்பானில் உணவும் இல்லை, வேறு ஒரு தொழிலும் இல்லை. அமெரிக்காவிலிருந்து ஒவ்வொரு வருஷமும் போதுமான தானியம் வந்துகொண்டிருந்தது. இன்றும் ஜப்பானுக்கு இருபது சத தானியம் வெளியிலிருந்து வருகிறது. இந்நிலைமையை மாற்றுவதற்காக ஜப்பானியர்கள் உணவு விஷயத்தில் முழுதும் சுயதேவைப்பூர்த்தியாளர்களாவது என்ற முயற்சியை ஆரம்பித்திருக்கிறார்கள்.

வயல் நிலங்களுக்கும், காடுகளுக்கும் சமமான மகத்துவம்:-

இன்று ஜப்பானில் மொத்த நிலத்தில் ஏறக்குறைய பதினாறு சத பூமியில் விவசாயம் நடைபெறுகிறது. இந்தப் பதினாறு சத நிலத்தை அடைவதற்கு சென்ற ஐம்பது வருடங்களாக விடாது முயற்சி செய்ய வேண்டியிருந்தது. இன்றும் அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய நிலத்தின் விகிதத்தை குறைந்தபக்ஷம் இருபது சதம்வரையில் அதிகப்படுத்தவேண்டும் என்ற கருத்துடன் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் மலைகளைச் சுத்தம் செய்து விவசாயத்திற்கு தகுதியான நிலத்தைத் தயாரித்தார்கள். விரிகுடாக்களை பின்னுக்கு நகர்த்தி அதிக நிலத்தை அடைவதற்குரிய முயற்சி செய்திருக்கிறார்கள். ஜப்பானில் அறுபது சத விகித நிலம் காடுகளாக இருக்கிறது. ஆனால் ஜப்பானியர்கள் விவசாயத்திற்காக நிலத்தைப் பெறவேண்டும் என்ற முயற்சியில் தங்களின் காடுகளை எந்த விதமான நஷ்டத்திற்கும் உள்ளாக்க விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்களின் அதிகமான கைத்தொழில்கள் காடுகளை நம்பியே இருக்கின்றன. காடுகள் குறைந்துபோனால் மழையின் அளவும் குறைந்துபோகும், நிலமும் கெட்டுவிடும் என்பதை அவர்கள் நன்றாக அறிகிறார்கள்.

தோட்டத்தைப் போலவே வயலையும் பாதுகாத்தல்

இவ்வளவு குறைந்த பூமியில் விவசாயம் செய்யவேண்டிய அவசியம் இருப்பதினால் அவர்கள் தங்கள் நிலத்தை தோட்டத்தைப் போன்று பாதுகாக்கிறார்கள். அவர்கள்

தம்முடைய தோட்டத்திலுள்ள ஒவ்வொரு சிறிய பெரிய செடிகளையும் கவனிக்கிறார்கள். அவர்கள் நிலத்திலுள்ள செடிகளுக்கும், நம்முடைய நிலத்திலுள்ள செடிகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. அதனால் விதைகள் குறைவாகச் செலவாகிறது. அதாவது நமக்குச் செலவாகக்கூடிய விகிதாச்சாரத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு செலவாகிறது. ஜப்பானில் நூறு அங்குல மழை வருடம் முழுவதும் பெய்து கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் அங்குள்ள நிலம் மழையை நம்பி இருக்கவில்லை. தொண்ணூறு சத நிலத்திற்கு வாய்க்கால், குளம் கிணறு முதலியவைகளின் மூலம் தண்ணீர்பாய்ச்சுவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் அவர்கள் தங்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச முடியும்.

ஜப்பானியர்கள் தங்கள் நிலத்திற்கு அதிகமான உரத்தை உபயோகிக்கிறார்கள். ஒவ்வொரு குடியானவனுடைய வீட்டிற்கு முன்பும் ஒரு குடிசை இருக்கிறது. அதில் அவன் எப்பொழுதும் கலப்பு உரம் தயாரித்துக்கொண்டே இருக்கிறான். ஓய்வு நேரத்தில் காட்டிலிருந்து இலை, தழை, புல் முதலியவைகளைச் சேகரிக்கிறான். மேலும் வயலில் அடிக்கடி களை யெடுப்பதினால் கிடைக்கும் புல் முதலியவைகளையும் சேகரிக்கிறான். அங்குள்ள எழுபது, எண்பது சத நிலத்தை எருதுகளின் உதவியின்றி மனிதன் தானே உழுகிறான். ஆகையால் அங்கு கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகையால் புல், கோதுமை உமி, வைக்கோல் முதலியவைகளை கலப்பு உரத்திற்காகவே உபயோகப்படுத்துகிறார்கள். கலப்பு உரம் தயாரிக்கும் குடிசைக்கு சிமின்ட் தளம் போடப்பட்டிருக்கிறது. அதில் இலை, தழை, புல், வைக்கோல் முதலியவைகளைப் போட்டு ஒவ்வொரு வாரமும் போதுமான தண்ணீரை ஊற்றி அதை மேலும், கீழுமாக புரட்டி விடுகிறார்கள். இதிலிருந்து வடியக் கூடிய தண்ணீர் ஒரு குழியில் சேருகிறது. அதை மறுபடியும் உபயோகத்திற்கு கொண்டு வருகிறார்கள். இம்முறையில் ஏறக்குறைய ஆறு மாதங்களில் வெண்ணெயைப் போன்ற மிருதுவான உரம் தயாராகிறது. ஆனால் சீக்கிரம் உரம் தயாரிக்க வேண்டுமானால் இம்மாதிரி செய்யும்போது அதில் இரண்டு அல்லது மூன்று சத "கால்ஷியம் நைட்ரேட்" கலக்கப் படுகிறது. அதனால் இரண்டரை மாதத்திற்குள் நல்ல உரம் கிடைத்துவிடுகிறது. அங்குள்ள ஒவ்வொரு ஏக்கருக்கும் வருடம் ஒன்றுக்கு இருபத்தைந்து முதல் ஐம்பது வண்டி வரை அதாவது ஏறக்குறைய ஐந்து முதல் பத்து டன் கலப்பு உரம் வயலுக்குப் போடப்படுகிறது.

கக்கூஸ் முறையும் மல உரமும்:—

மனிதனுடைய மல மூத்திரத்தை முக்கியமாக உரமாக உபயோகப்படுத்துவதில் ஜப்பானியர்களும், சீனர்களும் பிரசித்திபெற்றவர்கள். ஜப்பானுடைய ஆறு பெரிய பெரிய நகரங்களில் "பிளஷ்" கக்கூஸ்கள் இருக்கின்றன. இவைகளைத்தவிர சிறிய கிராமமாக இருந்தாலும் சரி, பெரிய நகரமாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு வீட்டிலும் கக்கூஸ்கள் இருக்கின்றன. அவைகள் கீழே குறிப்பிட்டுள்ளமாதிரி இருக்கின்றன:

நான்கு அடி நீளம், நான்கு அடி அகலம், நான்கு அடி ஆழமுள்ள சிமின்ட் தொட்டி தரையில் கட்டப்படுகிறது. அதன் மேல் பலகை ஆசனம் வைத்து கக்கூஸ் அறை தயாரிக்கப்படுகிறது.

தொட்டியிலிருந்து மல மூத்திரத்தை வெளியே எடுப்பதற்கு வசதியாக தொட்டியின் வெளிப் பக்கமாக ஒரு துவாரம் அமைக்கப்பட்டு அது எப்பொழுதும் மூடப்பட்டிருக்கிறது. பலகை ஆசனத்தின் மத்தியில் ஒரு அடி நீளமும், ஒன்பது அங்குல அகலமுள்ள ஒரு துவாரம் அமைத்து அதில் மண் பாத்திரம் ஒன்று வைக்கப்படுகிறது. இதனால் மர ஆசனம் அசுத்தமடைவதில்லை. மேலும் சுத்தம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். ஜப்பானியர்கள் மலம் கழித்தவுடன் தண்ணீரை உபயோகப்படுத்துவதில்லை; ஒருவிதமான 'டாய்லட்' பேப்பரைக் கொண்டு சுத்தம் செய்து கொள்ளுகிறார்கள். அந்த பேப்பரையும் தொட்டியிலேயே போட்டுவிடுகிறார்கள். பதினைந்து, இருபது தினங்களுக்குப் பிறகோ, அல்லது தொட்டியின் அரைப்பாகத்திற்கு அதிகமாக நிறைந்த பிறகோ, வீட்டுத் தலைவன் அல்லது தலைவி பெரிய மரக் கரண்டியினால் மல, மூத்திரம் முழுவதையும் எடுத்து மர வாளிகளில் நிரப்பு

127785

கிருர்கள். பின்னர் அவ்வாளிகளை காவடியில் மாட்டியோ அல்லது கைவண்டிகளில் வைத்தோ தமது வயலுக்குக் கொண்டு போகிருர்கள்.

ஒவ்வொரு வயலிலும் சிமிண்ட் அல்லது சுட்ட மண்ணினுலான நான்கு அடி ஆழமும், நான்கு அடி அகலமுமுள்ள இரண்டு வட்டத் தொட்டிகள் இருக்கின்றன. அத்தொட்டிகளில் இந்த மலம் மூத்திரம் எல்லாவற்றையும் கொட்டி அதில் இரண்டு மூன்று வாளித் தண்ணீரையும் கொட்டி விடுகிருர்கள். பின்னர் அதை நன்ருக கலக்கி பத்துப் பதினைந்து தினங்கள் வரை அழுகுவதற்காக வைத்து விடுகிருர்கள். பின்னர் அதில் ஆடை படிந்தாலோ, அல்லது அதன் நிறம் நன்ருக கருப்பானுலோ உரம் நன்ருக அழுகி இருக்கிறது என்று கருதப்படுகிறது. பின்னர் அதை மரக் கரண்டியினுல் எடுத்து மர வாளிகளில் நிரப்பி அதில் தண்ணீரைக் கலக்கிருர்கள். இதை ஒவ்வொரு செடியின் அடியில் ஒரு கரண்டி இந்த உரம் போடப்படுகிறது. அதை பக்கத்திலுள்ள உலர்ந்த மண்ணினுல் மூடி விடுகிருர்கள். இதற்குப் பின் இரண்டாவது அல்லது மூன்ருவது தினம் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகிருர்கள். நெல் பயரிடப் பட்டிருக்கும் வயலுக்கு இதைப் போன்ற மல மூத்திர உரம் மூன்று அல்லது நான்கு தடவை போடப்படுகிறது.

தோட்டிகளின் பிரசினையே இல்லை

சொந்த விவசாயம் இல்லாத அதிகமானவர்கள் பெரிய பெரிய நகரங்களில் வசிக்கிருர்கள். அவர்களின் வீட்டிலுள்ள மலத்தை எடுத்துச் செல்லும் வேலையை அக்கம்பக்கத்தில் ஐந்து அல்லது பத்து மைல் தூரத்தில் வசிக்கும் விவசாயிகள் செய்கிருர்கள். ஒவ்வொரு விவசாயியும் இருபத்தைந்து அல்லது முப்பது வீடுகள் விகிதம் பகிர்ந்துகொண்டு அங்குள்ள மலத்தை சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிருர்கள். இவ்வேலைக்காக வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து விவசாயிக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. விவசாயியும்வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒன்றும் கொடுப்பதில்லை.

எப்போதாவது விவசாயி, வீட்டுச் சொந்தக்காரருக்கு தான் விரும்பி காய், கறி கொண்டுவந்து கொடுக்கிருர். ஆனுல் கொடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அங்குள்ள முனிசிபாலிடிகளின் மல மூத்திரத்தை துப்புரவு செய்வதற்காக தோட்டிகளை வேலைக்கமர்த்த வேண்டிய அவசியமில்லை. மேலும், மல மூத்திரத்தை சுத்தம் செய்வதற்கு எந்த விதமான செலவும் செய்ய வேண்டியதில்லை. பெரிய பெரிய பொதுஜன ஸ்தாபனங்கள், ஹோட்டல்கள், ரெயில்வே நிலையங்கள் முதலியவைகளில் உள்ள மல மூத்திரங்களை சுத்தம் செய்யும் வேலையை அக்கம் பக்கத்திலுள்ள விவசாயிகள்தான் செய்கிருர்கள்.

விவசாயத்தில் விஞ்ஞானமும் சுயதேவைப் பூர்த்தியும்

கலப்பு உரம், மல மூத்திர முதலியவைகளை போதுமான அளவு உபயோகித்த பிறகும், ஜப்பானில் விவசாயத்திற்கு எவ்வளவு ரசாயன உரம் உபயோகிக்கப் படுகிறதோ, அந்த அளவு இந்தியா முழுவதிலும் விவசாயத்திற்காக உபயோகப் படுவதில்லை. அவர்கள் சிறிது சிறிதாக ஒவ்வொரு வேளாண்மைக்கும் ஏழு அல்லது எட்டுத் தடவை உரம் கொடுக்கிருர்கள். அது ஒவ்வொரு செடி, அல்லது வேருக்கும் போய்ச் சேருகிறது. தேவையான உரம், தண்ணீர், கிருமி, பூச்சிகளைத் தடுக்கக் கூடிய ஒவ்வொரு சாத்தியமான முயற்சி, விஞ்ஞான அறிவு, சலியா உழைப்பு முதலியவைகளின் காரணமாக ஜப்பான் தேசத்தினுடைய நிலத்தில் இந்திய நிலத்தில் உற்பத்தியாவதைக் காட்டிலும் ஒவ்வொரு ஏக்கரிலும் சராசரி நான்கு மடங்கு அல்லது அதிகமான தானியமும் விளைகிறது. மேலும் ஜப்பானியர்கள், தங்களின் நிலத்தில் விளைச்சலை அதிகரிப்போம், உணவு தானிய விஷயத்தில் நமது தேசத்தை சுயதேவைப் பூர்த்தியுள்ளதாகச் செய்வோம் என்ற தீவிர விருப்பமுடையவர்களாக இருக்கிருர்கள்.

ஜப்பானியர்கள் மல மூத்திரத்தை சேகரித்து, அதை உபயோகப் படுத்தக்கூடிய இந்த முறையானது நமக்கு அருவருப்பாகவும், அசுத்தமாகவும் தோன்றுவது இயற்கை. அந்த தேசத்திலுள்ள படித்தவர்கள் இவ் விஷயத்தை உணருகிருர்கள். அத்துடன்

— (தொடர்ச்சி 155-ம் பக்கம் பார்க்க)

சர்வோதய புரட்சிக்கு வாலிபர்களுக்கு அழைப்பு.

திரேந்திர மஜூம்தார்,

(அக்கிராசனர், சர்க்கா சங்கம்.)

சுதந்திரம் கிடைத்ததும் சுகமும் அமைதியும் கிடைக்கும் என எண்ணியிருந்தோம். ஆனால் வருடங்கள் 5 சென்றும் குழப்பமும், கஷ்டமும் அதிகரித்தனவேயொழிய குறையும் வழியாகத் தெரியவில்லை. இந்தக் காரணத்தால் வாலிபர்கள் இன்று நம்பிக்கை இழந்தவர்களாகவோ அல்லது வெறிபிடித்தவர்களாகவோ ஆகிறார்கள். ஜனங்களிடம் ஒருவரை ஒருவர் திட்டும் வழக்கம் பிறந்திருக்கிறது. அதனால் ஒன்றும் பயனில்லை. கடைசியில் இம்மாதிரி நிலைமைக்கு காரணம் என்ன என்பதை ஆழ்ந்து யோசிக்க வேண்டும். பிரசினைகளுக்கு உகந்த பரிகாரம் காண்பதில் உயிரையே பணயம் வைத்து முயற்சி செய்யவேண்டும்.

உண்மையான சுதந்திரம் இங்கிலாந்திலோ, ஜெர்மனியிலோ, அமெரிக்காவிலோ அல்லது ரஷ்யாவிலோ இல்லையென காந்திஜி சொல்லிக்கொண்டிருந்தார். அங்கு நடப்பது மக்களின் ஜனநாயக ஆட்சியாக இருக்கலாம். ஆனால் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படும்பொழுது, அதை எதிர்த்து போராடும் சக்தி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ளபொழுதுதான் சுயராஜ்யம் என்று சொல்லமுடியும். (யங் இந்தியா, 29—1—1925). மக்கள் தங்கள் வாழ்க்கையில் அத்தியாவசிய தேவைகளுக்கு அதிகாரிகளை எதிர்பார்க்காமலிருக்கும்பொழுதே இது ஏற்படமுடியும். அதாவது மக்கள் உயிர்வாழ்வதற்கு எந்தப்பொருள்கள் அவசியமோ அதில் சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். அதற்காக இப்பொழுது நடைமுறையிலிருக்கும் பொருளாதார அமைப்பில் புரட்சி ஏற்படுத்த வேண்டியிருக்கும்.

முதலாளித்துவத்தின் பயங்கரமான அமைப்பின் காரணமாக தேசம் சர்வாதிகாரத்தின் பிடியில் மாட்டிக்கொண்டிருக்கிறது. தற்சமயம் நிலவும் முதலாளித்துவ சுரண்டல் பொருளாதார முறையை அகற்றி கூட்டுறவு முறையில் உழைக்கும் புதிய சமூக ஏற்பாட்டை ஸ்தாபிக்க வேண்டும். முதலாளிகளை கொன்றுவிடுவதால் முதலாளித்துவம் அழிந்துவிடும் என வாலிபர்கள் நினைக்கிறார்கள்.

மக்களின் வாழ்க்கை பணத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கும் வரை அந்த பணத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் தனி மனிதன் அல்லது கோஷ்டியின் பிடியில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஆகையால் உணவு, உடை ஆகிய அத்தியாவசியமான தேவைகளுக்கு பணத்தை ஆதாரமாகக் கொண்ட சாதனங்களை பகிஷ்கரித்து உழைப்பை ஆதாரமாகக் கொண்ட சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருளாதார அமைப்பை ஏற்படுத்த பாரத நாட்டில் லக்ஷக் கணக்கான இளைஞர்கள் கிராமம் கிராமமாகச் சென்று புரட்சியுண்டாக்க வேண்டும். இத்துடன் சமூகப் புரட்சியும் செய்ய வேண்டும். காந்திஜியின் திருஷ்டியில் உண்மையான சுயராஜ்யத்தில் ஒவ்வொருவரும் உழைப்பாளிகளாக இருப்பார்கள். அப்பொழுதுதான் வகுப்பு ஏற்றத்தாழ்வுகளால் பீடிக்கப்பட்டு சுரண்டப்பட்டு வரும் நிலைமை மாறும். சமத்துவம் என்ற ஆதாரத்தில் உன்னதமான சுதந்திரம் ஏற்படும். அதன் மூலம் உலகத்தில் சத்தியமும் அஹிம்சையும் நிலைத்திருக்கமுடியும். இன்றைய தொழிலாளி முதலாளி என்ற பேதத்தை ஒழித்து ஓர் வர்க்க பேதமற்ற சமுதாயத்தை சிருஷ்டிக்க வேண்டும்.

—(பின் பக்கம் தொடர்ச்சி)

இந்த புரட்சியை ஏற்படுத்த மக்கள் இரண்டு வழியில் நினைக்கிறார்கள். அதாவது ஒன்று ஹிம்சை வழியும், மற்றொன்று அஹிம்சை வழியுமாகும். காந்திஜி நமக்கு அஹிம்சா பூர்வமான அரசியல் புரட்சியை நடத்தி காண்பித்துள்ளார். இப்பொழுதும் நாம் அவ்விதமான அஹிம்சா முறையிலேயே பொருளாதார சமூகப் புரட்சியை உண்டாக்கவேண்டும். வாலிபர்கள் கிராமங்கள் தோறும் சென்று உழைப்பாளி, விவசாயிகளுடன் ஒன்றறக் கலக்கவேண்டும். வாலிபர்கள் எவ்வளவு தூரம் கிராமத்தினரை சுயதேவைப்பூர்த்தியாளராகவும் தன்னம்பிக்கையுள்ளவராகவும் செய்கிறார்களோ அந்த அளவிற்கு இன்று பலவிதத்திலும் சுரண்டுபவர்களிடமிருந்து விடுவிக்க முடியும். எவ்வித சுரண்டலையும் எதிர்க்கும் சக்தியை அவர்களிடம் ஊக்குவித்தல் வேண்டும். தள்ளாத வயதில் தன் சரீர நிலைமையைக் கருதாது விநோபாஜி புரட்சிப் பாதையில் முன்னே சென்றுவருகிறார். அப்படியிருக்கையில் வாலிபர்கள் எப்படி கவலையற்று சுகமாக உட்கார்ந்திருக்க முடியும்? முடியாது. ஒருக்காலும் முடியாது. அவர்கள் ஆர்வத்துடன், உற்சாகத்துடன் உதவியளிப்பார்கள் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை.

இளைஞர்கள் தாங்கள் என்றும் தயாராக இருப்பதாகவும் தங்களிடம் ஆர்வம் இருப்பதாகவும் சொல்கிறார்கள். தியாகம் செய்யப் போதுமான ஊக்கமும் துடிதுடிப்பும் இருக்கிறதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்களை சமாளித்து வழிகாட்டுபவர்கள் யார்? இதற்காக அகில பாரத சர்க்கா சங்கம் தேச முழுவதிலும் சம்பூரண கிராம க்ஷேத்திரங்களை ஸ்தாபித்து ஜனங்களை புதிய புரட்சிக்கு தயார் செய்ய முடிவு செய்திருக்கிறது. தேச முழுவதிலும் கதாயி மண்டல்கள் நிறுவப்பட்டதினால் இத்திசையில் கொஞ்சம் முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் சார்பில் தேசமுழுவதிலும் உள்ள வாலிப சகோதர சகோதரிகளுக்கு என்னுடைய கோரிக்கை யாதெனில் தேசத்தை காப்பாற்றும் பொருட்டு அவர்கள் ஆயிரக்கணக்காக எங்கள் வேலையில் சேர்ந்து ஈடுபடவேண்டும் என்பதே. அவ்விதம் சேரும் வாலிபர்களை எங்களிடம் வைத்துக்கொண்டு தேவையான பயிற்சியளித்து அவர்களை பாரத தேசத்தின் கிராமங்களுக்கு அனுப்புவோம். கிராமங்களில் அவர்கள் கதாயி மண்டல்களை நிர்மாணிப்பார்கள். சம்பூரண கிராம ஸ்தாபனங்கள் மூலம் மக்களிடம் சுயதேவைப் பூர்த்தியையும் தன்னம்பிக்கையையும், ஆத்ம சக்தியையும் எழுப்ப முயற்சி செய்வார்கள். இம்முறையில் சேவை செய்ய முன்வரும் வாலிபர்களுக்கு இதர சமாஜ – பொருளாதார வாதங்களைப்பற்றிய அறிவும், ஸர்வோதய புரட்சியைப்பற்றிய ஞானமும் பிறருக்கு விளக்கும் சக்தியும் போதிய அளவு இருக்க வேண்டும். அத்துடன் ஸர்வோதய புரட்சியை அமுலில் கொண்டுவர போதுமான சரீர பலமும் மனோதிடமும் வேண்டும். இந்த லக்ஷியத்துடன் சேவை செய்ய முன்வரும் வாலிபர்கள் தங்களைப்பற்றிய பூரா விபரத்துடன் எனக்கு விண்ணப்பம் அனுப்பலாம். இதைப்பற்றி மேலும் அதிக விபரம் வேண்டுமானாலும் எனக்கு எழுதலாம்.

சேவாகிராமம்,
29—1—52.

அன்னை கஸ்தூரிபாவின் கதர் பக்தி

ஸ்ரீமதி வனமாலா பரீக்

[இந்த ஸர்வோதய மேளா மாதத்தில் 8 வருஷம் முன்பு 1944-ல் ஆகாகான் மாளிகையில் தேச அன்னை உயிர் நீத்தார். அவருடைய சிரார்த்த தினம் பிப்ரவரி 22-உ. அன்னைக்கு கதரிடத்தில் இருந்த பக்தி நம் தமிழ் தாய்மார்கள் எல்லோருக்கும் ஏற்பட்டு காந்திய சமூக புரட்சியை பூர்த்தி செய்ய தங்களுடைய பங்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.]

பா, தம் ஆடைகளின் தன்மையை பாபுவின் விருப்பம் அல்லது கருத்தை யொட்டித் தீர்மானித்துக் கொள்ள வேண்டி வந்தது; அல்லது தீர்மானித்து வந்தார் என்று சொல்லலாம். 1919-20ல் பா கதர் உடுத்தினர். அதைக் குறிப்பிடுவதற்கு முன் 1896ல்—தென்னாப்பிரிக்காவுக்குப் போன சமயத்தில் பாபூ பாவின் ஆடையில் என்னென்ன மாறுதல்கள் செய்வித்தார் என்பதை கவனிப்போம். பாபுஜி 'ஆத்ம கதை' யில் சொல்லுவதாவது:

முதலில் நாகரிக ஆடை

"குடும்பத்துடன் நான் செய்த முதல் சமுத்திர யாத்திரை இது. ஹிந்துக் குடும்பங்களில் சிறு வயதிலேயே கலியாணம் நடந்து விடுவதனாலும் மத்தியதர வகுப்பாரிடையே பெரும்பாலும் கணவன் படித்தவனாகவும் மனைவி எழுத்தறிவே இல்லாதவளாகவும் இருப்பதனாலும் கணவன் மனைவி ஆகியோருடைய வாழ்க்கையில் வித்தியாசம் காணப்படுவதோடு கணவன் மனைவியின் போதகனாகவும் இருக்கவேண்டி வருகிறது. நான் என் மனைவி குழந்தைகள் ஆகியோருடைய உடுப்பு, சாப்பாடு, பேச்சு ஆகியவற்றின் முறையை பெரிதும் கவனிக்க வேண்டியதாயிற்று. அவர்களுக்கு இவற்றில் சரியான முறை எதுவென்று சொல்லிக் கொடுக்க வேண்டிவந்தது. அவைகளுள் சிலவற்றை நினைக்கும்பொழுது இப்பொழுதும் எனக்கு சிரிப்பு வருகிறது. ஹிந்து மனைவி கணவனிடம் பக்தியாக நடந்துகொள்வதையே தன்

ஜப்பானின் அதிசயமான முன்னேற்றம்

(152-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ப்ளஷ் கக்கூஸ்கள் மேலானதென்றும் சொல்கிறார்கள். ஆனால் ப்ளஷ் கக்கூஸ்களினால் உரம் நஷ்டம் அடைந்துபோகும் என்ற காரணத்தால் அதை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

ஜப்பானிலிருந்து இந்தியாவிற்கு வந்து, சேவாகிராமத்தில் கக்கூஸை உபயோகப்படுத்தும் முறையைப் பார்த்த ஒருவர் ஜப்பானியர்களினுடைய முறையைக்காட்டிலும், சேவாகிராமத்தில் கக்கூஸை உபயோகப்படுத்தும் முறை மிகவும் நன்றாக இருக்கிறதென்பதை ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் சேவாகிராமக் கக்கூஸ் முறையில் விஞ்ஞானத்தை கையாள வேண்டியதவசியம். அதனால் எவ்வளவு உரத்தில் எவ்வளவு நைட்ரேஜன் முதலிய அவசியமான சாரம் இருக்கிறது என்பது தெரியும். ஜப்பானியர்களின் முறை சிறிது அசுத்தமாக இருக்கிறது என்றாலும் இங்குள்ள நமது குடியானவர்கள் சாணத்தை சுலபமாகவும், சகஜமாகவும் எடுத்து உபயோகிப்பதைப் போலவே அங்குள்ள குடியானவர்களும் மல மூத்திரத்தை சுலபமாகவும் சகஜமாகவும் எடுத்து உபயோகிக்கிறார்கள். ஜப்பானில் இந்த வேலை செய்வதை இழிவு என்று கருதுவதில்லை. இதுமட்டுமல்ல மற்ற தொழில்களுக்கு சமூகத்தில் எவ்வளவு மகத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு மகத்துவம் இதற்கும் கொடுக்கப்படுகிறது. இந்தியா உணவு விஷயத்தில் சுயதேவைப் பூர்த்தியுள்ளதாக வேண்டுமானால் விளைநிலத்தில் அதிகத்திலும் அதிகம் உரம் உபயோகிக்கக் கூடிய பழக்கத்தை கையாள வேண்டும். அதற்கு இந்தியா தனது மல மூத்திரத்தை விஞ்ஞான நோக்குடன் உரத்திற்காக உபயோகப்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

தலைசிறந்த கடமை என்று நம்புகிறாள். ஹிந்து கணவனே தன்னை தன் மனைவியின் கடவுளாகவே கருதுவதால், அவன் ஆட்டி வைக்கிறபடியெல்லாம் அவள் ஆட வேண்டியவளாயிருக்கிறாள்.

"நான் குறிக்கும் காலத்தில் திருந்திய முறையில் வாழ்வோர் என எம்மை எல்லோரும் சொல்வதற்கு எமது வெளி நடையுடை பாவனைகளைக் கூடிய வரையில் ஐரோப்பியர்களுடையதைப்போல் ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று நம்பினேன். இவ்வாறு செய்தால்தான் பெருமை; பெருமை ஏற்படாத வரையில் தேச பக்திக்கு இடமில்லை.

"ஆகையால் மனைவி குழந்தைகள் ஆகியோருடைய ஆடைகளை நானே தீர்மானித்தேன். குழந்தைகள் முதலியோர் காத்தியவார் வைசியர்களைப்போல் இருந்தால் நன்றாய் இருக்குமா? பார்சிகள் மிகவும் திருந்திய முறையில் வாழ்வோர் என்று கருதப்படுவோர். ஆகையால் ஐரோப்பிய முறையில் உடுத்தப்பிடிக்காதபோது பார்ஸிகளைப்போல் உடுத்தச் செய்தேன். மனைவிக்கு பார்ஸி சகோதரிகள் உடுத்துவது போன்ற சேலைகள் எடுத்தேன். குழந்தைகளுக்குப் பார்ஸிக் கோட்டும் நிஜாரும் தைக்கச் செய்தேன். எல்லோருக்கும் 'பூட்ஸும் ஸ்டாகிங்சும்' இன்றியமையாதவை. மனைவிக்கும் குழந்தைகளுக்கும் பல மாதங்கள் வரையில் இவை இரண்டும் பிடிக்கவேயில்லை. பூட்ஸ் காலைக் கடிக்க ஸ்டாகிங்சில் துர்நாற்றம் ஏற்பட்டதோடு அவை கால்களையும் நோகச் செய்தன. இந்தத் தொந்திரவுகளுக்கு என்னிடம் சமாதானம் தயாராய் இருந்தது. சமாதானம் பொருந்தா விட்டாலும் என் அதிகாரத்திற்கு அதிக சக்தியிருந்தது. ஆகையால் மனைவியும் குழந்தைகளும் வேறு வழியில்லாததினால் உடுப்பின் இந்த மாறுதல்களை ஏற்றுக் கொண்டார்கள். அதே நிர்பந்தத்தோடும் அதைவிட அதிக அதிருப்தியோடும் சாப்பிடும் பொழுது (கைக்குப் பதிலாக) அவர்கள் கத்தி முட்கள் ஆகிய வற்றை உபயோகிக்கலானார்கள். என்னுடைய மயக்கம் தெளிந்த பிறகு அவர்கள் மீண்டும் பூட்ஸ்—ஸ்டாக்கிங்சையும் கத்தி—முட்கள் முதலியவைகளையும் விட்டுவிட்டார்கள். முதலில், மாறுதல் செய்வது எவ்வளவு சிரமமாக இருந்ததோ அதைப்போல பழக்கம் ஏற்பட்டுவிட்ட பிறகு அதை விடுவதும் சிரமமாகவே இருந்தது. ஆனால் இந்தச் சீர்திருத்தச் சட்டையைக் கழற்றி எறிந்ததினால் எங்கள் சுமை குறைந்ததென்றே எனக்குத் தோன்றுகிறது."

மொரட்டுக் கதர் சேலைக்கு மாற்றம்

பூட்சும் ஸ்டாக்கிங்சும் பாவுக்கு பல மாதங்கள் வரையில் அருவருப்பாய் இருந்ததைப்போல் அவரைக் கதர் உடுத்தச் செய்வதற்கும் பல மாதங்கள் இல்லையென்றாலும், சில நாட்களாவது நிச்சயமாகப் பிடித்திருக்கும். ரௌலட்சட்டத்தை எதிர்த்துத் தொடங்கப்பட்ட சத்தியாக்ரஹப்போரை ஒத்திப்போட்டபிறகு பாபூ 'சுதேசி' வேலையை மிகவும் தீவிரமாகத் தொடங்கினார். அக்காலத்திய சுதேசி விரதத்தில் சில மாதங்கள் வரையில் மில் துணியும் அனுமதிக்கப் பட்டிருந்தது. ஆனால் சிறிது காலத்திற்குள்ளேயே மில் துணிப் பிரசாரத்திற்கு நாம் தேவையில்லை என்று பாபுவுக்குப்பட்டுவிட்டது. வெளி நாடுகளிலிருந்து வரும் துணிகளைத் தடுக்க நாட்டில் துணியை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது அவசியம். இந்த வேலையை ராட்டையின் மூலமாகவே நன்கு செய்யமுடியும். ஆகையால் பாபூ எல்லோரிடத்திலும் ராட்டையில் நூற்றுக் கதர் உடுத்தும்படி வற்புறுத்தத் தொடங்கினார். ஆனால் அந்தக்காலத்தில் அகலமான கதர்த் துணி தயாராகவில்லை. 37 அங்குல அகலமுள்ள கதர் நெய்வதே அரிதாயிருந்தது. வேஷ்டியோ சேலையோ கதராக உடுத்த வேண்டுமென்றால் 6 அல்லது 8 நெம்பருள்ள காடுமுரடான நூலைக்கொண்டு நெய்த அகலக் கட்டையான துணியை இணைத்தே உடுத்த வேண்டும். இவ்வாறு இணைத்துத் தயாரித்த சேலையின் எடை 2½ அல்லது 3 ராத்தல் இருக்கும். 'இந்த சேலைகள் மிகவும் பளுவாய் இருக்கின்றன. எங்களால் தூக்கமுடியவில்லை, என்று வாதிக்கும் பெண்களைப் பார்த்து பாபூ சில சமயம் "9 மாதம் குழந்தையை வயிற்றில் சுமக்கும் சகோதரிகளுக்கு நாட்டுக்காக தம் ஏழைச் சகோதரிகள் மானத்தைக்காப்பதற்காக உடுத்தும் இந்தச் சேலை எப்படி பாரமாகத் தோன்றும்?" என்று கேட்பார்.

ஸ்திரீகளிடத்தில் கதர் பிரசாரம்

ஆசிரமத்திலும் பாபு ஒவ்வொரு நாளும் கதர் உடுத்தும்படி எல்லாச் சகோதரிகளிடமும் சொல்லுவார். பாபுவின் வாதத்தைக் கேட்ட சகோதரிகள் கதர் கனமானது என்று சொல்லாதிருந்தபோதிலும் அன்றுடம் தோய்ப்பது சிரமமாயிருக்கிறது என்ற காரணத்தை வற்புறுத்திச் சொல்லுவார்கள். இதற்கு பாபூ, "உங்கள் சேலைகளை நான் துவைத்துத் தருகிறேன்" என்பார். இவ்வாறு வேடிக்கையும் விளையாட்டும் நடந்துகொண்டேயிருக்கும். இந்த விவாதங்களிலெல்லாம் பா சகோதரிகளின் தலைவியாய் விளங்குவார். பாபூ அடிக்கடி, "பாவை பூட்சும் ஸ்டாக்கிங்சும் அணியும்படி செய்வதற்காக நான் கொஞ்சமாகவா நல்ல வார்த்தை சொல்லவேண்டி வந்தது? பிறகு அவற்றை விடும்படி செய்வதற்கும் ஓரளவு அவள் தாவாங்கட்டையைப் பிடிக்கத்தான் வேண்டியிருந்தது. ஆனால் பூட்சும் ஸ்டாக்கிங்சும் போடச் செய்வதற்காக அவளை குஷிப்படுத்த வேண்டியிருந்ததைவிட இப்போது கதர்ச் சேலை உடுத்தச் செய்ய அதிகம் தட்டிக்கொடுக்க வேண்டியிருக்கும் போல் தோன்றுகிறது" என்பார். நான் கேள்விப்பட்ட வரையில் ஸ்ரீ சாரளாதேவி சௌதுராணியே முதன் முதலில் கதர்ச்சேலை உடுத்தினர். நாடு முழுவதிலுமே முதன் முதலில் கதர்ச்சேலை உடுத்தியவர் அவரே என்று நினைக்கிறேன். அந்த காலத்தில் அவர் ஆசிரமத்தில் தான் இருந்துவந்தார். பிறகோ பாவும் கதர்ச்சேலை உடுத்திவிட்டார். சிறிது காலத்துக்குள்ளேயே எல்லாச் சகோதரிகளும் கதர் உடுத்தத் தொடங்கி விட்டார்கள். பிறகு போதிய அகலமுள்ள கதர் நெய்யத் தொடங்கவே சொந்தத்தில் நூற்பவர்களுக்கு சேலையின் விஷயத்தில் சிரமம் எதுவுமே இல்லாதுபோயிற்று.

கதரில் விசேஷப் பற்று

இதன்பிறகு பாவுக்கு கதரினிடத்தில் எவ்வளவு பற்று ஏற்பட்டுவிட்டது என்பதை விளக்கும் உதாரணமொன்றை இங்கே தருகிறேன். ஒரு நாள் பாவின் காலில் சுண்டு விரலிலிருந்து ரத்தம் வந்தது. பா ஒரு கதர் துணியை அதில் சுற்றத்தொடங்கவே ஒரு சகோதரி மெல்லிய துணியொன்றைக் கொண்டுவந்து கொடுத்து, "இந்த மெல்லிய துணியைக் கட்டினீர்களானல் அது காலில் உறையாது, கட்டும் நழுவாமலிருக்கும்" என்று சொன்னர். அதற்கு பா, "கதரைத் தான் கட்டவேண்டும். அது சொரசொரப்பாய் இருந்தாலும் பாதகமில்லை" என்று சொல்லி கதரையே கட்டிக்கொண்டார்.

சிறையிலும் பாபு நூற்ற நூலின் சேலை

பாபுஜி ஆகாகான் மாளிகையில்—சிறையில் உபவாசம் தொடங்கியபொழுது அவரைப் பார்ப்பதற்காகப் போன ஒரு ஆசிரமப் பெண்ணினிடம் பா, சேவா கிராமத்தில் கிடக்கும் தன்னுடைய துணிமணிகளை இன்னின்னருக்கு விநியோகித்துவிடவேண்டும் என்று சொல்லிவிட்டு, "பாபுஜி தம் கையாலேயே நூற்று எனக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரித்துக்கொடுத்திருந்த சேலையை இங்கே சிறைக்கு அனுப்பிவிடு. நான் இறந்தபிறகு என் உடம்பில் அதைத்தான் போட்டு மூட வேண்டும்" என்று சொன்னர். சாதாரணமாக பாவின் சேலைகள் பாபூ நூற்ற நூலைக் கொண்டே தயாரிக்கப்பட்டுவந்தன. பா சிறையில் ஏறியபொழுதும் அவர் உடம்பில் பாபூ கையால் நூற்ற நூலில் தயாரான சேலை இருந்தது.

அன்னை கஸ்தூரிபாவின் சரித்திரம்

ஸ்ரீமதி வனமாலா பரீக், சுசீலா நையார் எழுதிய இரண்டு பாகங்கள்

ஒவ்வொன்றும் 180-பக்கம்	ரூ. 1-4-0
இரண்டு பாகங்களும் தபாலுடன்	„ 3-0-0

காந்தீஜியைப் பற்றிய மூன்று நூல்கள்

பாப்பாவின் காந்தி	ரூ. 0-12-0
காந்திக் காட்சிகள்	„ 1-4-0
பாபு - என் தாய்	„ 0-10-0

★ ஸர்வோதய பிரசுராலயம், A. I. S. A., வீரபாண்டி, திருப்பூர் ★

கம்யூனிஸ்டுகள் வெற்றிக்கு என்ன காரணம்?

ஆச்சாரிய விேனாபா பாவே

[விேனாபாஜியுடன் உத்தர பிரதேசத்தில் யாத்திரை செய்துவரும் ஸ்ரீ ச. ஜகந்நாதன் பின்னர் அனுப்பியுள்ள விேனாபாஜியின் பிரார்த்தனை பிரசங்கத்தையும் யாத்திரைக் குறிப்பையும் இந்த இதழிலேயே சேர்த்துள்ளோம்.]

"பொருளாதார சுதந்திரத்திற்கு முக்கியமாக இருப்பது நிலப்பிரச்னை. நிலப்பிரச்னை தீராத வரைக்கும் தேசத்தில் சாந்தி இராது. உலகிலேயே இதுவரை நடந்திராத பெரிய தேர்தல் இப்போது இங்கு நடந்திருக்கிறது. படித்தவர், படிக்காதவர் நிலச்சுவான்தார், நிலமில்லாதவர், மேல் ஜாதி, கீழ் ஜாதி, ஆண் பெண் என்ற எந்தவித பேதமுமில்லாமல் எல்லோருக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த பேதங்கள் இல்லாமல் தேர்தல் நடப்பதின் உட்கருத்தை சரியாக அறிந்துகொண்டு சமூக நிர்மாணம் செய்தால், தேச முன்னேற்றத்திற்கு நல்ல முறையில் வழிவகுத்ததாகும். சமூகம் இப்போதிருக்கும் நிலைமையில் நீடித்துவிட்டால், நாட்டில் குழப்பம்தான் உண்டாகும். நல்ல வழியில் சமூகத்திலுள்ள பேதங்கள் அகற்றப்படாவிட்டால், வேறு வழிகளில் சமூகம் திருத்தி அமைக்கப்படத்தான் செய்யும். ஆனால் அந்த வழியில் சாந்தி இராது. இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பூமிதான யக்ஞ இயக்கத்தால், குழப்பமின்றி ஒரு புரட்சி சமூகத்தில் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னாட்டில் கம்யூனிஸ்டுகள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை நமக்கு ஏதாவது பாடம் கற்பிக்கிறதா இல்லையா? சிந்தித்துப் பாருங்கள் இந்த நிலைமையை நான் முன்னரே அறிவேன்.

இதுவரை 63,000 ஏக்கர்

"மேலும் இதுவரை பூமிதான யக்ஞத்தில் 63,000 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. நான் அன்பினால் விஷயங்களை எடுத்துச் சொல்லுகிறேன். மக்கள் உள்ளத்தில் இருக்கும் பகவத் சொரூபத்தை தட்டி எழுப்புவதுதான் என் வேலை. இதுதான் என்னுடைய பக்தி மார்க்கம். பக்தனுடைய பிரார்த்தனையின் தூண்டுதலால் என்ன வேண்டுமோ அதை பகவான் செய்துவிடுகிறார். குழந்தைகள் எங்கும் 'பூதான யக்ஞம் வெற்றியடைக' என்று கோஷிக்கிறார்கள். சமுதாயத்தில் எப்பொழுதும் மாறுதல்கள் இருந்துகொண்டுதானிருக்கும். இயற்கையின் மாறுதலை நாம் பார்க்கிறோம். நம் வாழ்க்கையிலும் குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபம்; பின் வாலிபம் எப்பொழுதும் நிலைத்திராமல் கிழப் பருவம் வந்துவிடுகிறது. உலகின் இந்த நித்ய மாறுதலை நாம் உணர்ந்து கொள்ளாவிட்டாலும், மாறுதலுக்குத் தயாராக இல்லாவிட்டாலும், மாறுதல் வந்துதான் தீரும். மாறுதலை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுவோம். யாராவது கிழப் பருவம் வராது என்று எண்ணினால் அது எவ்வளவு பரிதாபகரமாயிருக்கும். வரப்போகும் நிலைமையை முன்னரே அறிந்துகொண்டு கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தினால், கிழப்பருவம் வந்தாலும் துன்பம் இராது. தவறினால் கிழப்பருவம் வந்துதான் தீரும். அது பிணியும் துன்பமும் நிறைந்து நரக வேதனையாக இருக்கும். பெரியோர்கள் வகுத்திருந்த ஆச்ரம தர்மங்கள் சீர்குலைந்துவிட்டன. இந்திரியங்கள் சலித்து குடுகுடு கிழமாகும் வரை கிரஹஸ்தாசிரமத்தை விடுவதில்லை. இந்திரியங்கள் செயலற்றபிறகு வேறு வழியில்லாமல் போகத்தை விடுகிறார்கள். சாகுந்தருவாயில் நரக வேதனை அனுபவிப்பதைக்காட்டிலும், உரிய காலத்தில் மனதைக் கட்டுப்படுத்தி, புத்திசாலித்தனமாக வாழ்க்கையை ஒழுங்குபடுத்திப் போக சிந்தனையை ஒடுக்கிக்கொள்ளுவது நல்லதல்லவா?

சமுதாய தர்மம்

"இயற்கையின் மாறுதலைப்போல, சமுதாய மாறுதலும் வரும். ஆங்கிலேயர் நாட்டைவிட்டுப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டபிறகும், அவர்கள் போகாது இங்கு நீடித்திருந்து, பலாத்காரமாக வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கும் நமக்கும்

பகைமை இருந்திருக்குமே. ஆனல் அவர்கள் கெட்டிக்காரர்கள், புத்திசாலிகள், நிலைமையை அறிந்து விலகிக்கொண்டதின் பலாபலன். அவர்களுக்கும் நமக்கும் நட்பு இருந்து வருகிறது. போகும்போது நல்ல பெயர் வாங்கிக்கொண்டு போனார்கள். அம்மாதிரியே நம் தேசத்து ராஜாக்களும் காலத்திற்கேற்ப, சொந்த கஷ்ட நஷ்டங்களை சகித்துக்கொண்டு, ராஜ்யங்களை தேசத்துடன் இணைத்திராவிட்டால், அவர்களுக்கும் கெட்ட காலமாக இருந்திருக்கும். நம் நாட்டில் சமீப காலத்தில் நடந்த இரண்டு மாறுதல்களை திருஷ்டாந்தமாக சொன்னேன். இவ்விதம் மாறுதல்கள் இருந்துகொண்டேயிருக்கும். வரப்போகும் மாறுதலை உணர்ந்து புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால், சாந்தமான நிலை ஏற்படும். அப்படியில்லாவிட்டாலும் மாறுதல் நடந்துதான் தீரும். ஆனல் நாம் விரும்பாத வழியில் நடக்கும். இனி நடக்கவேண்டிய மாறுதல் என்ன? உலகில் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத வறுமை இங்கு இருக்கிறது. கிராம கைத்தொழில்கள் அழிந்துவிட்டன. உழைப்பவர்கள் வேலையில்லாமல், பூமி இல்லாமல் எத்தனை காலம் சும்மா இருப்பார்கள். மற்ற சுற்றுவட்டார நாடுகளில் நிலப்பிரச்னையில் மாறுதல்கள் நடைபெற்று வருகின்றன. புதிய கருத்துக்கள் மேல்நாடுகளில் உருவாகி வருகின்றன. மற்ற நாடுகளிலிருந்து இந்தியா விலகித் தனித்திருக்க முடியாது. இங்கு மாறுதல் தாமதப்பட்டாலும், நிலைமை மாருமல் இராது. ஆகையால் புத்திசாலித்தனமாக வருங்காலத்தை தெரிந்துகொண்டு, அன்பினல் நிலப்பிரச்னையைத் தீர்க்க வேண்டும்.

இப்போது ஆள்பவர் தரித்திர நாராயணரே

"ஏழை, பணக்காரர் அனைவரும் பூமி தானத்தில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். சிலர், நாங்கள் வீட்டில் நாலைந்து பேர்கள் இருக்கிறோம், நிலம் கொஞ்சமாக இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். வீட்டில் ஐந்தாவது குழந்தை பிறந்துவிட்டால் அதற்கும் உண்டல்லவா? தரித்திரநாராயணனை ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குழந்தையாக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் காணப்படாமல் அவ்யக்தராக எல்லா வீடுகளிலும் இருக்கிருர். வீட்டில் 5 பேர்கள் இருந்தால் அவருடைய 6-வது பங்கை எனக்கு கொடுங்கள். சாஸ்திரங்களில் ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இப்போது இந்தியாவிலே ராஜா யார்? வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஏழைகள்தான் நம் நாட்டில் மெஜாரிட்டியாக இருக்கிருர்கள். ஆகையால் அவர்கள்தான் நம் நாட்டிற்கு அரசர். தரித்திரநாராயணன்தான் ஆள்பவர். கல்லூரிப்பட்டம் பெற்றவர்களோ, கோடீஸ்வரர்களோ இந்தியாவின் ராஜா அல்ல. ஆகையால் தரித்திரநாராயண ராஜனுக்கு ஆறில் ஒரு பங்கு நிலத்தைக் கொடுங்கள்.

சர்வோதயம்

"இந்த புதிய வழியை உலகம் கவனித்துக்கொண்டிருக்கிறது. நிலம் கேட்டு வாங்குவதென்பது இந்தியாவில்தான் நடக்கும் என்று வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதுகின்றன. மற்ற நாடுகளிலும் இது முடியும் என்று நம்புகிறேன். ஆயினும் இந்தியாவில்தான் இத்தனை ஆதரவு கிடைக்கும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். நான் தந்திரியுமல்ல, என்னிடம் என்ன பலம் இருக்கிறது? அப்படியிருந்தும் நான் சொல்லுவதை அன்புடன் கேட்டு நிலம் கொடுக்கிருர்கள். சமமுறையில் நிலப் பிரச்னை தீர்ந்தால் அழகிய சொரூபம் நாட்டில் தோன்றும். வேறு வழியில் தீர்ந்தால் குரூரமான சொரூபமாக இருக்கும். ஏழைகளுக்கு கடமைப்பட்டவர்களாக அன்புடன் நிலம் கொடுப்பதுதான் நியாயம். அவர்களை வஞ்சித்து நிலத்தை அபகரித்துக்கொண்டிருக்கிறோம். இது நம்முடைய பாவம் என்று உணரவேண்டும். இவ்வித பாவனைகளில் நிலைமை மாறும்போது உண்டாகும் சொரூபம் வணக்கத்திற்குரியது. இவ்வித இயக்கத்தால் சர்வோதய சமுதாயம் உருவாகும். சர்வோதய சமூகத்தில் ஒருவர் மேல் ஒருவர் சவாரி செய்து சுரண்டுதல் இராது. ஒருவரை ஒருவர் நிந்திக்கமாட்டார்கள். எல்லோரும் தனக்கென்று சிந்திக்காமல் சமூகத்திற்காக சிந்திப்பார்கள். தனிப்பட்டவர் சமூகத்திற்கும் சமூகம் தனிப்பட்டவருக்காகவும் இருக்கும். சுதந்திரத்திற்குப்பின் இந்த சர்வோதய சமுதாயத்தை நிர்மாணிப்பது நம் வேலை.

கடவுளின் விருப்பம்

“நம் தேசம் பக்தியும் ஆத்ம சிந்தனையும்—நிறைந்த நாடு. தெலிங்கானவில் கம்யூனிஸ்டு களின் பிரசாரம் தீவிரமாக இருக்கிறது. அவர்கள் கடவுள் நம்பிக்கை யில்லாதவர்கள். ஆயினும் நான் அங்கு போயிருந்த சமயம் காலையிலிருந்து மாலைவரை ராம பஜனை நடந்தது. கிராமத்தில் போய்ச் சேர்வதற்கு மூன்று மைல் இருக்கும்போதே பஜனை ஆரம்பித்து விடுவார்கள். கம்யூனிஸ்டுகள் வருவார்கள் போவார்கள். எத்தனையோ சர்க்கார் வந்து போகும். ஆயினும் ராம நாமம் எப்போதும் வேரூன்றி இருக்கும். இதை நான் தெலிங்கானவில் அனுபவித்தேன். நாம் கடவுளைத் தாயும் தந்தையாகக் கருதுகிறோம். அவர் தன் குழந்தைகள் அனைவரின் சுகத்தையும் விரும்புகிறார். சூரியன், காற்று, தண்ணீர் இவைகளை எல்லோரும் பேதமின்றி அனுபவிக்கிறோம். அவ்விதமே பூமியையும் எல்லோருக்காக ஆண்டவன் படைத்துள்ளார். சூரியன், காற்று, தண்ணீர் எல்லோரும் அனுபவிக்க முடிந்தாலும் பூமி சிலரிடத்தில், ஏராளமாகவும் பலரிடத்தில் இல்லாமலும் இருக்கிறது. பாடு படாதவர்களிடம் அதிகமான நிலமும் உழைப்பவர்களிடம் நிலம் இல்லாமலிருப்பதும் ஆண்டவன் விருப்பமாக இருக்க முடியுமா? ஒருவரிடம் 5 ஏக்கரும், மற்றொருவரிடம் 500 அதிகமாகவும் இருப்பது ஆண்டவன் விருப்பத்திற்கு விரோதமல்லவா? ஒவ்வொருவரும் எவ்வளவு நிலத்தில் உழுது பாடுபட முடியுமோ அவ்வளவு நிலம் தான் வைத்துக் கொள்ள வேண்டும். நிலம் ஆண்டவனுடையது. நிலத்தின் உடைமையாளர் என்று யாரையும் கருதுவது தவறாகும்.

“கடவுளின் குண கானத்திற்காக ஒரு நாள் பக்கிரியாக உங்களிடம் வந்திருக்கிறேன். உங்களுடைய மகனைப் போன்று, சகோதரனைப் போன்று கடைமையைச் செய்ய வந்திருக்கிறேன். உங்களிடம் மறைந்திருக்கும் ஆத்மீக சக்தி எனக்குத் தெரிகிறது. கொள்ளைக் கூட்டத் தலைவன் வால்மீகி ரிஷியானதும் உங்களுக்குத் தெரியும். அது மாத்திரமா? நாம் கல்லிலும் கடவுளைத் தோற்றுவித்துவரும் மனப் பான்மையுடையவர்கள். உங்களுடைய உண்மை சொருபத்தையும் சக்தியையும் நீங்கள் தெரிந்து கொண்டால் விரும்பிய காரியத்தை உங்களால் செய்ய முடியும். இந்த நம்பிக்கையில் தான் பூமிதான யக்ஞத்தை உங்கள் முன் ஆரம்பித்திருக்கிறேன்.”

* * *

உபன்னியாசத்திற்குப் பின் பிரார்த்தனையில் எல்லோரும் பரவசப் பட்டனர். பிரார்த்தனை முடிந்த பிறகும் ஜனங்கள் அமைதியாக சில நிமிஷங்கள் அமர்ந்திருந்தனர். 500 ஏக்கர் வரை பிரார்த்தனைக் கூட்டத்தில் பூமிதானம் அளிக்கப்பட்டது.

குறிப்பும் செய்தியும் (அட்டை 3-ன் தொடர்ச்சி)

திருநெல்வேலி விபாக்

திருநெல்வேலி விபாக்கிலிருந்து தெற்கே 5 பேர் கொண்ட கோஷ்டி யொன்று நாங்குநேரி மார்க்கமாக ஸர்வோதய மேளா நடக்கும் கன்னியாகுமரி நோக்கி கிராம யாத்திரை செய்துகொண்டு பிரசாரம் செய்து வருவதாக ஷை கோஷ்டியார் எழுதுகிறார்கள்.

* * *

ஸர்வோதய சம்மேளனம்

இவ் வருஷ ஸர்வோதய சம்மேளனத்தை சேவா கிராமத்தில் மார்ச்-மீ கூட்டுவதாக சிவராம்பள்ளி மகாநாட்டில் முடிவு செய்யப் பட்டது. ஆனல் வினேபாஜி உத்திரப் பிரதேசத்தில் பூமிதான யக்ஞ யாத்திரை செய்து வருகிறதால் அவர் சம்மேளனத்தில் கலந்துகொள்ள சௌகரியமாக காசிக்கருகில் சேவாபுரி என்ற இடத்தில் ஏப்ரல் முதல் வாரத்தில் சம்மேளனம் நடத்தப்படும். சர்வோதய சமாஜத்தில் தங்கள் பெயர்களை ரிஜிஸ்டர் செய்து கொண்டவர்களுக்கு சர்வ சேவா சங்கத்திலிருந்து அழைப்பு வரும்.

பிழைத் திருத்தம்:- பக்கம் 158, முதல் பாரா, வரி 23-ல் ‘எடுக்கப்பட்டிருக்கிறார்கள்’ என்பதை ‘ஏற்பட்டிருக்கிறது.’ என்று படிக்கவும்.

Edited and Published by N. Ramaswami
For Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

127785

குறிப்பும் செய்தியும்

தமிழ்நாட்டில் சர்வோதய மேளா

மகாத்மா காந்தியின் அஸ்தியைக் கரைத்த ஸ்தலங்களில் பிப்ரவரி மாதம் 12-ந்தேதி சர்வோதய மேளா கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டில் சென்னைக் கடற்கரையிலும், திருச்சி ஜில்லாவில் ஸ்ரீரங்கத்தில் காவேரி நதிக்கரையிலும் ராமநாதபுரம் ஜில்லாவில் ராமேஸ்வரம் கடற்கரையிலும், கோவை ஜில்லாவில் பேரூர் நதிக்கரையிலும் கொண்டாடப்படுகிறது.

கோவைஜில்லாவில் ஈரோடு, ஊத்துக்குளி, கொடுமுடி, நம்பியூர், குண்டடம், மூலனூர், தாராபுரம், படியூர், காங்கயம் முதலிய சர்க்கா சங்கத்தின் வஸ்திராலயங்களிலிருந்து சங்கத் தொண்டர்களும், இதர அன்பர்களும் சேர்ந்து 10 கோஷ்டிகள் 30—1—'52ல் கால்நடையாகப் புறப்பட்டு தினம் ஒவ்வொரு கிராமத்திற்குச் சென்று குறிப்பிட்ட முறையில், நூற்பு யக்ஞம், துப்புரவு, பிரார்த்தனை சர்வோதய பூமி தானப் பிரசாரம் முதலியவற்றைச் செய்து வருவார்கள். இதைத் தவிர முகாசிமங்கலம் சாந்தி சேவா சங்கத்திலிருந்தும் பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத்திலிருந்தும் இரு கோஷ்டிகள் புறப்பட்டு கிராம யாத்திரை செய்வார்கள். எல்லா கோஷ்டிகளும் பிப்ரவரி 11-உ இரவு 12 மணிக்குள் மேளாவில் கலந்துகொள்ள பேரூர் வந்து சேருவார்கள்.

பேரூர் மேளாவில் ஒரு பொருட்காட்சி நடைபெறும். அதில் மகாத்மாவின் படங்களும் சர்வோதய பிரசுராலயத்தின் சர்வோதய இலக்கிய நூல்களும் வைக்கப்படும். அத்துடன் சில குடிசைத் தொழில்களும் செய்து காட்டப்படும்.

சென்னை விபாக்

சர்க்கா சங்கத்தின் சென்னை விபாகின் வட்டாரத்தில் இரண்டு கோஷ்டிகள் ஜனவரி 30-உ முதல் பிப்ரவரி 11-உ வரையிலும் கால்நடையாக யாத்திரை செய்து 12-உ திருவல்லிக்கேணி கடற்கரையில் மேளாவில் கலந்துகொள்வார்கள்.

முதல் கோஷ்டி வண்ணையம்பதியிலிருந்து புறப்பட்டு மாதவரம், பெரியசேக்காடு, மாத்தூர், புழல் நாரவாரிகுப்பம், அரக்கம்பாக்கம், மேலகொண்டையர், திண்ணனூர், பட்டாபிராம், ஆவடி, அம்பத்தூர், வில்லிவாக்கம், நம்மாள்வார்பேட், வழியாக போய்ச்சேருவார்கள். இரண்டாவது கோஷ்டி காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு வாலாஜாபாத், தென்னேரி, எச்சூர், மாத்தூர், போத்தூர், மாம்பாக்கம், ஸ்ரீ பெரும்புதூர், மணிமங்கலம், தாம்பரம், கீழ்கட்டளை, திருவான்மியூர், மயிலாப்பூர் வழியாகவும் வந்து மேற்படி மேளாவில் கலந்துகொள்வார்கள்.

இலங்கை காந்தீய சேவா சங்கம்

இலங்கையில் காந்திய சேவா சங்கம் காந்திய சர்வோதய நோக்கத்துடன் சில வருடமாக தொண்டாற்றி வருவது வாசகர்கள் அறிந்ததே. A. I. S. A. சர்வோதய பிரசுராலயத்தார் வெளியிட்டுவரும் நூல்களை இலங்கை மக்களுக்கு அதிக அளவில் வினியோகித்து வருகிறார்கள். எமது தமிழ்க் கதர் மலர் பத்திரிகைக்கும், ஆங்கில கதர் உலகப் பத்திரிகைக்கும், இலங்கை அன்பர்களை சந்தாதாரர்களாகச் சேர்த்து உதவி செய்து வருகிறார்கள். மேலும் காந்திய சர்வோதய லக்ஷியத்தைப் பரப்புவதற்கு சர்வோதய ஆசிரமம் ஒன்றை அமைக்க முயற்சித்து வருகிறார்கள்.

சர்வோதய சமாஜத்தில் பதிந்துகொள்ள விரும்புவோர் காந்திய சேவா சங்கத்தின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ. சி. க. வேலாயுதம் பிள்ளை அவர்களுக்கு எழுதி குறிப்பிட்ட விண்ணப்பத்தைப் பெற்றுப் பதிந்துகொள்ளலாம்.

இலங்கை சர்வோதய சமாஜ ரிஜிஸ்டரில் பதிந்துகொண்டு இந்தியாவில் சேவா கிராமத்திலுள்ள சர்வ சேவாசங்க ரிஜிஸ்தரில் பதிந்துகொள்ளப் படுவார்கள். இவ்வாண்டு மார்ச் மாத இறுதியில் வருடாந்திர சர்வோதய மகாநாடு காசிக்கருகில் நடைபெறும். முன்னதாகவே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளப்படுபவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பப்படும். அழைப்பிதழ் பெறாதவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள இயலாது. இது விஷயமாக பொதுக் காரியதரிசி, காந்தீய சேவா சங்கம், நிர்வேலி, யாழ்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

(தொடர்ச்சி - 160-ம் பக்கம் பார்க்க)

காந்தீய - கதர் - ஸர்வோதய இலக்கியம்

காந்திஜி எழுதிய நூல்கள்

	ரூ. அ.
ஸர்வோதயம்	0—6
ஆசிரம வாழ்க்கை	1—4
ராமநாமம்	0-12
ராட்டை — தத்துவ விளக்கம்	1—4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4
நீதி தர்மம்	0—4
ஆசிரம பஜனாவளி (தொகுப்பு)	0—6

18 FEB 1952
MADRAS

A collection of Gandhiji's writings:

The Ideology of the Charkha	0—14

கதர் தத்துவ நூல்கள்

சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
கதர் தத்துவமும் சேவையும்	0-12
சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0—8
சர்க்கா சங்க வரலாறு	1—0
சேவாகிராம முகாம்	1—0
காந்தீய நவநீதம்	2—0
கதாயி மண்டல்	0—2
தமிழ்நாட்டு விபாகங்கள்	0—2

சமக்ர கிராம சேவா நூல்கள்

மலஜல சுத்தி	0—8
சுயம்பூரண கிராமம்	0—5
துப்புரவு விஞ்ஞானம்	0—8

காந்தீய — ஸர்வோதய கருத்துப் பிரசாரத்திற்கும் புரட்சிக்கும்

* கதர் மலர் *

வாசகர்களுக்கு வேண்டுகோள்

வாசகர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாராகச் சேரக்கூடிய தங்கள் நண்பர்களின் பெயரும் விலாசமும் விவரமாக எழுதக் கோருகிறோம்.

பூமிதான யக்ருத் தலைவர் வினோபாஜியின் பிரசங்கங்கள்

	ரூ. அ.
காந்திஜியின் குரல்	0—6
ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும்	0—2
அறிவுரைகள்	0-12
பிரார்த்தனைப் பிரசங்கம்	0—8

கதர்—ஸர்வோதயப் புரட்சி நூல்கள்

ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் எழுதியவை

ராட்டைப் புரட்சி	0—6
ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
,, ,, பாகம் II	0—3
இதென்ன சுயராஜ்யம்?	0—3
Revolutionary Charkha	0—6
Demand of the Times	0—12

கதர் சாஸ்திரமும் கணிதமும்

நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
பட்டை போட சுலபவழி	0—4
பருத்திப் பிரசினை	0—6
கரம்பு செய்தல்	0—8
கதர் உபகரணங்கள்	1—0
கைராட்டையின் சரித்திரம்	1—8
கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	1—0
நூற்புக் கணிதம் பாகம் I	0—6
,, ,, II	0—8
,, ,, III	0-14
,, ,, IV	1—0

அறிவிப்பு

ரூபாய் 10-க்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் இங்கு அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு இல்லாமல் புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸர்வோதய பிரசுராலயம், A. I. S. A., வீரபாண்டி, திருப்பூர்

கமலா பிரஸ், திருப்பூர்